21TH FEBRUARY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 70 | பக்கங்கள் - 16 | editor.uthayam@gmail.com



## கனேமுல்ல சஞ்சீவ கொலை விவகாரம்;

# குடும்பத்துக்கு சமூக சிக்கல் அஸ்மானின் சகோதரர் வழக்கு தாக்கல்



பாதாள உலகத் தலைவராகக் கருதப்படும் கனேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பாக மொஹமட் அஸ்மான் ஷெரிப்தீன் என்ற பெயரைக் கொண்ட நபரின் குடும்பத்தினர் நியாயமற்ற முறையில் தவறாக அடையாளம் காணப்பட்டு பகிரங்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறி, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02ம் பக்கம்பார்க்க...

## விண்ணப்பித்தோர் பின்வாங்குவதால் ஹஜ்ஜுக்கு புதியவர்களை இணைக்க முடிவு

இவ்வாண்டு புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்துக்கு பதிவுக் கட்டணம் செலுத்திய

03ம் பக்கம்பார்க்க...

## தமிழ் மொழியிலும் அமைச்சரவை முடிவுகள்

### பஸ்ஹான் நவாஸிடம் பணி ஒப்படைப்பு!



வாராந்த அமைச்சரவை முடிவுகளை தமிழிலும் வெளியிடுவதற்கு ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ ஏற்பாடு செய்துள்ளார்.

இதன்படி நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகள்

03ம் பக்கம்பார்க்க...

## பலஸ்தீன வேறிட குடியமர்த்தலை நிராகரித்தோரைப் பாராட்டும் உலமா சபை

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையாகிய நாங்கள் காஸா மக்களின் கட்டாய வேறிட குடியமர்த்தலை உறுதியாக நிராகரித்த அனைத்து

03ம் பக்கம்பார்க்க...



## ஜனாதிபதி – மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் மாலைதீவு குடியரசின் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா கலீலுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (20) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

கடந்த தேர்தல்களில் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்திற்குக் கிடைத்த வெற்றி தொடர்பில்

03ம் பக்கம்பார்க்க...

## சவூதி ஸ்தாபகர் தினம் நாளை கொழும்பிலும் அனுஷ்டிக்க ஏற்பாடு



(காலித் ரிஸ்வான்)

2025 பெப்ரவரி 22 அன்று, சவூதி அரேபியா அந்நாட்டு நிறுவன தினத்தை (Founding Day) கொண்டாடுகிறது.

1727 ஆம் ஆண்டு இமாம் முஹம்மத் பின் சஊத் முதல் சவூதி அரசை நிறுவி 298

13ம் பக்கம்பார்க்க...

## மக்கள் ஆணைக்கு எதிரான வரவு செலவுத் திட்டம்

### பாராளுமன்றில் சஜித் பிரேமதாச காட்டம்



2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் குறித்து விவாதிக்கும் போது, இந்த வரவு செலவுத் திட்டத்தினூடாக நாட்டிற்கு வழங்கப்பட்ட தீர்வுகள் மற்றும் பதில்களை பகுப்பாய்வு செய்யும்

03ம் பக்கம்பார்க்க...

## நாட்டில் அதிகரிக்கும் வெப்பம்; அவதானமாக இருக்க வேண்டுகோள்!

நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களில் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்தில்

03ம் பக்கம்பார்க்க...

## ஆயிரமாவது குத்பா அஞ்சலும் வரலாறும்

### சனியன்று நூல் வெளியீடு!




வானொலி முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர், சிரேஷ்ட அறிவிப்பாளர், பன்னூலாசிரியர், கலாபூஷணம், எம். இஸட் அஹமட்

04ம் பக்கம்பார்க்க...

## முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி முன் முன்வைத்த ஹக்கீம்



மன்னார், சிலாவத்துறை கடற்படை முகாம் அமைக்கப்பட்ட பிரதேசத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளையும் அவர்களது உடைமைகளையும் அவற்றின் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைத்து விடுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி, ஜனாதிபதி அனுர குமார

04ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## கனேமுல்ல...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இந்த மனுவை உண்மையான முகமது அஸ்மான் ஷெரிப்தீனின் சகோதரர் தாக்கல் செய்துள்ளார்,

மேலும் இந்தக் கொலை தொடர்பாக பெப்ரவரி 19 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இந்தப் பெயரைக் கொண்ட உண்மையான நபர் அல்ல என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் நுவான் ஜெயவர்தனவை பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர் தாசுன் பெரேரா, பொலிஸார் மற்றொரு நபரை தடுத்து வைத்திருப்பதாகவும், முகமது அஸ்மான் ஷெரிப்தீனும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் இரண்டு வெவ்வேறு நபர்கள் என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த தவறான அடையாளம் ஷெரிப்தீனின் குடும்பத்துக்கு சட்ட மற்றும் சமூக சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாக வழக்கறிஞர் கூறினார், மேலும் பொருத்தமான உத்தரவைப் பிறப்பிக்க நீதிமன்றத்தைக் கோரினார்.

சமர்ப்பிப்புகளைக் கருத்தில் கொண்டு, தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி, சந்தேக நபர் இன்னும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாததால், சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரது கட்சிக்காரர் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று வழக்கறிஞர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை,

புலனாய்வு அமைப்புகள் வெளிப்படுத்திய தகவல்களின்படி, “கணேமுல்லே சஞ்சீவா“ கொலைக்குப் பின்னணியில் இருந்த “கெசல்பத்தர பத்மே“, என்பவரே! இது தொடர்பான அனைத்தையும் இத்தாலியில் இருந்து இயக்கியதாகக் கூறப்படுகிறது.

அவர் “ஹரக்கட்டா“வின் காதலியுடன் இத்தாலிக்கு தப்பிச் சென்றதாக புலனாய்வு அமைப்புகள் தெரிவித்தன.

துபாய் உட்பட பல நாடுகளுக்குச் சென்ற கெசல்பத்தர பத்மே, தனது தந்தையின் கொலைக்குப் பழிவாங்க இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டது தெரிய வந்துள்ளது.

இந்தப் படுகொலையைத் தொடர்ந்து, சஞ்சீவவின் குழுவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் நாட்களில் கெசல்பத்தர பத்மேவுக்கு எதிரான நடவபின்னர் சுட்டிக்காட்டின.

சஞ்சீவவின் மரணத்துக்குப் பழிவாங்குவதற்குப் பதிலாக, கணேமுல்லவின் போதைப்பொருள் கடத்தலை நடத்திய பாதாள உலகத்தின் மீது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இதுபோன்ற மோதல்கள் உருவாக்கப்படுவதாகவும் பாதாள உலக ஒடுக்குமுறைப் பிரிவுகள் எச்சரிக்கின்றன.

இருப்பினும், கணேமுல்ல சஞ்சீவவின் உதவியுடன் போலி கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி துபாய்க்குத் தப்பிச் சென்ற கரந்தெனிய சுத்தாவின் தலைமையிலான கரந்தெனிய ராஜு/, பெட்ட மஞ்சு, தினேஷ் வசந்த மற்றும் பிற குழுக்கள் விரைவில் அதிகாரத்துக்கான சண்டையைத் தொடங்கக்கூடும் என்று தகவல்கள் உள்ளன.

இந்நாட்டில் கொலைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 23 பாதாள உலகத் தலைவர்கள் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் கணேமுல்ல சஞ்சீவவின் தலையீட்டின் மூலமாகவே துபாய் மற்றும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

துபாய், இத்தாலி, பிரான்ஸ், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பதுங்கியுள்ள பாதாள உலகக் கும்பல்களும் தங்கள் சக்தியைக் காட்டத் தொடங்கும் என்றும் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கனேமுல்லா சஞ்சீவவுடன் இணைந்து பணியாற்றிய கமாண்டோ சாலிந்தா, துபாய் கலனா உள்ளிட்ட குழுவும், பின்னர் அவருடனும் உரானவா பத்மேவின் குழுவுடனும் இணைந்து இந்தக் கொலைத் திட்டத்தில் உதவியதாக விசாரணை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர், மேலும் முழுத் திட்டமும் கெசல்பத்தர பத்மே தலைமையில் நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இதற்கிடையில், இந்தக் கொலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் கூறும் கதையால் முழு நாடும் குழப்பமடைந்து வருகிறது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் தலைமையகத்துக்கு ஐ.ஜி.பி.யின் கட்டளைத் தகவல் பிரிவால் வழங்கப்பட்ட தினசரி சம்பவ அறிக்கையும், இங்கு கொலை சந்தேக நபர் முகமது அசாம் ஷெரீப்தீன் என்ற முன்னாள் கமாண்டோ வீரர் என்று கூறியிருந்தது. இருப்பினும், கொலைச் சந்தேக நபர் சமிந்து தில்ஷான் கந்தனாராச்சி என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று (20) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்போது கொழும்பு குற்றப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த சந்தேக நபர், சிங்களவரா முஸ்லிமா? அல்லது, ஒரே நபர் இரண்டு பெயர்களிலும் தோன்றுகிறாரா என்பது குறித்து இன்னும் விசாரித்து வருகிறது.

இதற்குக் காரணம், முகமது அசாம் ஷெரிப்தீனின் உறவினர்கள் நேற்று (20) கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மனு ஒன்றை சமர்ப்பித்ததே ஆகும். கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் முகமது அசாம் ஷெரிப்தீனை சந்தேக நபராகப் பெயரிட்டது அவரது கட்சிக்காரருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பாதகத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறி, கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் இந்த விடயம் அழைக்கப்பட்டபோது, முகமது அசாம் ஷெரிப்தீனின் சகோதரர் ஒருவருக்காக ஆஜரான வழக்கறிஞர் தாசுன் பெரேரா, சாட்சியங்களை முன்வைத்து, கணேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர் முகமது அசாம் ஷெரிப்தீன் அல்ல என்று கூறினார்.

பொலிஸாரினால் வெளியிடப்பட்ட சந்தேக நபரின் புகைப்படமும், சம்பந்தப்பட்ட சந்தேக நபரின் புகைப்படமும் ஒன்றல்ல, இரண்டு என்றும் வழக்கறிஞர் தெரிவித்தார். இதன் விளைவாக, முகமது அசாம் ஷெரிப்தீனின் உறவினர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் வீட்டுக்கு வந்த ஒரு குழுவினர், பொலிஸ் அதிகாரிகள் என்று கூறிக் கொண்டு அங்கிருந்து விசாரணை நோக்கங்களுக்காக ஒரு மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கொலை நடந்த நேரத்தில் அடையாளம் காணப்பட்ட குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டு அவரது தொலைபேசி தரவு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்ட போதிலும், சந்தேக நபரின் தொலைபேசி தரவு திடீரென நெடுஞ்சாலையில் காணாமல் போனது. சில மணி நேரங்களுக்குப் பிறகு, புத்தளம் பாலவியா பகுதியில் வைத்து சந்தேக நபர் பொலிஸ் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார், மேலும் சந்தேக நபரின் நடவடிக்கைகள் மற்றும் அங்குள்ள அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்தும் தற்போது பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

கொழும்பு குற்றப் பிரிவு தற்போது சந்தேக நபரிடம் விசாரணை நடத்தி வருகிறது, அவர் 15 மில்லியன் ரூபா ஒப்பந்தத்துக்காக இந்தக் கொலையைச் செய்ததாகக் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் மஹரகம, தம்பஹேன வீதியைச் சேர்ந்த சமிந்து தில்ஷான் கந்தனாராச்சி ஆவார். சந்தேக நபர் 2014 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் முகமது ஷெரிப்தீன் என்ற பெயரில் காலாட்படை வீரராக சேர்ந்தார். பின்னர் அவர் பெப்ரவரி 20, 2020 அன்று சமிந்து தில்ஷ ான் கந்தனாராச்சி என்ற பெயரில் 3ஆவது கமாண்டோ படையில் சேர்ந்தார். அவர் ஜூன் 4, 2020 அன்று கமாண்டோ பயிற்சியின் போது இராணுவத்தை விட்டு வெளியேறினார். பின்னர் அவர் மே 1, 2024 அன்று பொது மன்னிப்பு பெற்றார், மேலும் சட்டபூர்வமாக இராணுவத்திலிருந்து இராஜினாமா செய்தார்.

”இந்த கொலை ஒப்பந்தத்தை நான் 1.5 மில்லியனுக்குப் பெற்றேன்.” எனக்கும் இரண்டு லட்சம் ரூபா கிடைத்தது. நீதிமன்றத்துக்கு வருவதற்கு முன்பு நாங்கள் மருதானையில் ஒரு ஹோட்டல் அறையில் தங்கினோம். “இஷாரா“ என்ற பெண் எனக்கு ஆயுதத்தைக் கொண்டு வந்து தந்தார். அவர் எனக்கு நீண்ட காலமாகத் தெரிந்த, நெருக்கமாகப் பழகிய ஒரு பெண். துப்பாக்கியை உடற்பகுதியில் மறைத்து வைத்து, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று சந்தேக நபர் விசாரணை அதிகாரிகளிடம் கூறினார்.

கல்கிஸ்ஸை, வட்டரபபொலவில் இரட்டைக் கொலையைச் செய்ததாகவும் சந்தேக நபர் ஒப்புக் கொண்டுள்ளார்.







## மக்கள்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

போது, அரசாங்கம் முன்வைத்துள்ள வரவு செலவுத் திட்டமானது கிடைத்த மக்கள் ஆணைக்கு எதிராக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமாகும்.

வளமான நாடு அழகான வாழ்க்கை, நாடு அநுரவோடு என முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் இதில் அமைந்துள்ளனவா என பார்க்கும் போது இந்த வரவுசெலவுத் திட்டம் வாக்குறுதியளித்தபடி கிடைத்த மக்கள் ஆணைக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசாங்கம் முன்வைத்துள்ள வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இன்று (21) உரையாற்றும் போதே போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற தேர்தல் கொள்கை பிரகடனத்தின் பக்கம் 105 இன் படி, மாற்று கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை கொண்டு வருவோம் என்று கூறப்பட்டாலும், அந்த வாக்குறுதியை கைவிட்டு, இன்று மக்கள் மீது பெரும் அசௌகரியத்தையும் அழுத்தத்தையும் சுமத்தி, மக்களுக்கு நலன்புரி ஒதுக்கீடுகளை வரையறுக்கின்ற 2024 நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரகாரம் அடிப்படைச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13% மட்டுமே, முதன்மை இருப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3% மட்டுமே என்றும், உலகில் 10 நாடுகளில் மட்டுமே இத்தகைய வரம்பு இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவை அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகள் அல்ல என்றும், தேர்தல்கள் மூலம் கிடைத்த மக்கள் ஆணைக்கு துரோகம் இழைத்துள்ளனர். கூறிய விடயங்கள் அனைத்தையும் மறந்து விட்டு இந்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

IMF இணக்கப்பாடும், சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள இணைக்கப்பாடுகள் மிகவும் பாதகமான ஒப்பந்தங்களாகும். ஐஆகு வேலைத்திட்டத்தில் இருந்து பின்வாங்காது, மக்கள் சார், மக்களின் பக்கத்திலிருந்து சிந்தித்து மனிதாபிமான புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் இந்த வரம்புகள் காரணமாக, புறநிலைகள் தொடர்பான திருத்தங்களைச் செய்ய முடியாது சமூக இடைவெளி ஏற்பட்டுள்ளது. பொதுப் பண்டங்களை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தாலும், இந்தக் கட்டுப்பாடுகளினால் அதுவும் தடைப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

## தமிழ்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சிங்களத்துக்கு மேலதிகமாக தமிழிலும் அறிவிக்கப்பட்டது.

இதற்காக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் பணி புரியும் பஸ்ஹான் நவாஸூக்கு இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மாலைதீவு குடியரசின் வாழ்த்துக்களைத் தெரிவித்த வெளியுறவு அமைச்சர், தேர்தல் வெற்றிக்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவிற்குப் பிறகு, வலுவான நாடாக எழுச்சியடைந்து வருவது தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும், மாலைதீவை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு இலங்கையிடமிருந்து பாடம் கற்றுக் கொண்டிருப்பதாகவும் அப்துல்லா கலீல் சுட்டிக்காட்டினார்.

மாலைதீவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு வெளியுறவு அமைச்சர்,இதன் போது ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் மாலைதீவு ஆற்றிவரும் மகத்தான பங்களிப்பிற்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

## விண்ணப்பித்தோர்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பலர் பின்வாங்கி இருப்பதினால் அவர்களது இடத்துக்கு புதியவர்களை தேர்வு செய்வது பற்றி எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்பு தீர்மானிக்கப்படும் என முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களம் தெரிவித்தது.

3500 பேருக்கு ஹஜ் கடமையை நிறைவேற்ற வசதி வழங்கப்பட்டிருந்தும், இதற்காக விண்ணப்பித்த பலர் இதுவரை உறுதிப்படுத்தாதமையினால், 3500 க்கு மேலதிகமாக பதிவு செய்த வரிசைப்படி தெரிவு செய்யப்படவுள்ளதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பிர்னாஸ் தெரிவித்துள்ளார். இம்முறை 5000க்கும் மேற்பட்டோர் தங்களது பெயர்களை பதிவு செய்த போதும் 3500 பேருக்கு வாய்ப்பு வழங்கப்பட உள்ளது. சவுதி அரேபியா இலங்கைக்கு 3500 பேருக்கே கோட்டாவை வழங்கியுள்ளது.

முதலில் பதிவு செய்த 3500 பேர்களின் பட்டியலில் உறுதி செய்யாதவர்களுமாக சேர்த்து 4500 வரை இருப்பவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நாட்டில்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

காணப்படுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு, சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பம் அவதானம் செலுத்த வேண்டிய நிலையை எட்டியுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

போதுமான அளவு தண்ணீர் குடிக்குமாறு, நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் வானிலை ஆய்வு மையம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் இந்த நிலைமையில் விசேட அவதானம் செலுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், பொது மக்கள் வெளிர் நிற ஆடைகளை அணிய வேண்டும் என்றும் கூறியுள்ளது.

## பலஸ்தீன...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அரசாங்கங்களுக்கும், நிறுவனங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏற்றுக்கொள்ள முடியாத இந்த மும்மொழிவானது பலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கௌரவத்தை குறைத்து மதிப்பிடுவதுடன் சர்வதேச சட்டம், மனித உரிமைகள் மற்றும் நீதிக்கோட்பாடு, சுய நிர்ணய உரிமை என்பவற்றை புறக்கணிப்பதாகவும் உள்ளது.

காஸா மக்களின் கொள்கை ரீதியான நிலைப்பாடானது நீதி, சமாதானம் மற்றும் உலகம் முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் என்பவற்றுக்கான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. பலஸ்தீனிய மக்களின் சுதந்திரம், கண்ணியம் மற்றும் அரசுரிமைக்கான நியாயமான அபிலாஷைகளை ஆதரிக்குமாறு சர்வதேச சமூகத்தினை நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

பல தசாப்தங்களாக ஆக்கிரமிப்பு, இடப்பெயர்வுடன் துன்பங்களை அனுபவித்த காஸா மற்றும் பலஸ்தீன மக்களுடன் நாங்களும் இணைந்து நிற்கிறோம். முன்மொழியப்பட்ட இடமாற்றத் திட்டம் அநீதியானது மட்டுமன்றி பிராந்தியத்தில் நிலவும் மனிதாபிமான நெருக்கடியை மேலும் மோசமாக்குகிறது.

பலஸ்தீன மக்களின் நிலம், வீடுகள் மற்றும் இறையாண்மைக்கான உரிமைகள் சர்வதேச சமூகத்தால் ஆதரிக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட வேண்டும்.

சர்வதேச சட்டங்கள், நீதி மற்றும் சமத்துவக் கொள்கைகளுக்கு இணங்க பலஸ்தீன மக்களின் சுதந்திரம், கௌரவம் மற்றும் மாநில உரிமைகளைப் பெற தங்களது ஆதரவை தீவிரப்படுத்துமாறு உலகளாவிய தலைவர்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் மனச்சாட்சி உள்ள அனைத்து நாடுகளையும் நாங்கள் அழைக்கிறோம்.

பலஸ்தீன மக்களுக்கு அல்லா/ஹ தஆலா வலிமைகளையும், பொறுமையையும், வெற்றியையும் வழங்குவானாக. அப்பகுதியில் நீதியும் நிரந்தர அமைதியும் நிலவட்டும்.

பிரபல எழுத்தாளர்
ராஜன் ஹூல் எழுதிய
'உயிர்த்த ஞாயிறு அனர்த்த'
(மறைகரம் வெளிப்பட்டபோது)
எனும் நூலை தமிழில் மொழிபெயர்த்து
சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன் அவர்கள்.
அண்மையில் கொழும்பு - இலங்கை மன்ற கேட்போர் கூடத்தில்
வைத்து வெளியீடு செய்திருந்தார்கள்.



இப் புத்தகம் தேவைப்படுவோர் கீழ்வரும்
கணக்கு இலக்கத்திற்கு ரூபா. 900 ஐ
(தபால் செலவு உள்ளடங்கலாக ரூ. 900)
வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை வட்ஸ்அப் செய்யவும்.

Account No: **000250007329**
Account Name: **NM Ameen**
Bank: **Sampath Bank**
Branch: Pettha Branch

077 2612288



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 FEBRUARY 21 - FRIDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# உள்ளூராட்சி தேர்தலை நடாத்த சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

நாட்டின் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு இருந்த தடைகளை நீக்குவதற்கான சட்ட திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் கடந்த வியாழன் அன்று நிறைவேற்றப்பட்டது. 187 வாக்குகளுடன் எதிர்ப்பு வாக்குகள் எதுவும் இன்றி இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2022 ஆம் ஆண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டும். கடந்த அரசாங்கம் பொருளாதார காரணிகளை காட்டி தேர்தலை நடத்தாது காலத்தை கடத்தியது. மக்களது உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் உரிய நேரத்துக்கு தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொண்ட அரசின் செயற்பாடு பாராட்டுக்குரியது. அதிலும் மக்களுக்கு குறிப்பாக ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி ஆகும்.

உள்ளூராட்சி விசேட ஏற்பாடுகளின் சட்டம் திருத்தப்பட்டு தேர்தலை நடத்துவதற்கு இருந்த தடைகள் இப்போது நீக்கப்பட்டு விட்டது. இதன்படி நாட்டின் 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அடுத்த மூன்று மாதத்துக்குள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றங்களின் நியமனப் பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டு புதிதாக நியமனப் பத்திரங்களை கோரி தேர்தலை நடத்துவதற்கு இத்திருத்தம் வழி செய்துள்ளது. தேசிய மக்கள் சக்தி ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பின்பு மக்களின் நிலைப்பாட்டை பரிசீலிப்பதற்கு கிடைத்திருக்கும் முதலாவது சந்தர்ப்பமாக இத்தேர்தல் அமையப்போகிறது. இத் தேர்தலை சட்டத்துக்கு ஏற்ப நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

உள்ளூராட்சி தேர்தலை பாராளுமன்றத்தில் இடம்பெற்று வரும் வரவு செலவு திட்ட விவாதம் முடிவுற்றதன் பின்னர் நடத்துமாறு எதிர்க்கட்சியின் கூட்டமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எதிர்வரும் சிங்கள தமிழ் புத்தாண்டு மற்றும் வெசாக், முஸ்லிம்கள் அனுசரிக்கும் ரமலான் நோன்பு முடிந்ததன் பின்பு நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுப்பதே சிறந்தது. தேர்தலுக்கான திகதியை தீர்மானிக்கும் போது தேர்தல் ஆணைக்குழு இதை குறித்தும் கவனத்தில் எடுப்பது அவசியம் ஆகும். தேர்தல் நாட்டின் ஜனநாயகத்தின் போக்கு தராதரம் என்பவற்றை அளவிட்டுப் பார்ப்பதற்கு கிடைக்கும் சந்தர்ப்பமாகும். அதன்படி தேர்தலை ஒத்திப் போடுவது ஜனநாயகத்துக்கு விடுக்கும் பலத்த அச்சுறுத்தலாகும்.

இந்த நாட்டில் ஜனநாயகம் பற்றி பேசியவர்கள் கடந்த ஆட்சி காலத்தில் தேர்தலை வேண்டுமென்றே ஒத்திப்போட்டனர். இந்தப் பின்னணியில் தேர்தல் நடைபெறுவது மிகவும் முக்கியமானது. இத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியம் ஆகும்.

## முஸ்லிம்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் வியாழன்று (20), பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவரிடம் இந்த கோரிக்கையை ரவூப் ஹக்கீம் விடுத்துள்ளார். அது பற்றி கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

இந்த சிலாவத்துறை கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள பாரிய நிலப் பிரதேசம் யுத்தம் நிகழ்ந்து வந்த1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து பழைய சிலாவத்துறை கிராமம் பெரும்பாலும் அரசாங்கத்தினால் கடற்படைக்கு கையகப்படுத்தப்பட்டு இன்னும் தொடர்ந்து பல்லாண்டுகளாக நாங்கள் விடுத்து வருகின்ற வேண்டுகோள்களை முற்றாகப் புறக்கணித்து அரசாங்கத்தினால் கடற்படை முகாமாக பயன்படுத்தப்பட்டு வருவதனால், அவற்றின் உண்மையான உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த,பாரம்பரிய கலாசாரப் பின்னணியைக் கொண்ட இந்தப் பாரிய நிலப்பரப்பு எதிர்கால சந்ததிகளுக்கு இல்லாமல் போகக்கூடிய அபாயம் நிலவுகிறது.

இடம்பெயர்ந்தவர்களில் கணிசமானோர் பின்னர் மீளக் குடியேறியுள்ள போதிலும் ,அவர்கள் தங்களுக்குச் சொந்தமான காணிகளை செய்கை பண்ணவோ அவற்றை உரிய முறையில் பயன்படுத்தவோ அங்கு முன்னர் போன்று வழமையான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவோ முடியாதுள்ளனர். வேலி கட்டியும்,அரண் அமைத்தும் மிகப் பெறுமதி வாய்ந்த இந்த நிலப்பரப்பை தொடர்ந்தும் அரசாங்கம் கடற் படை முகாமாக விஸ்தரித்திருப்பது அநீதியானது .

இந்தப் பாரதூரமான விஷயத்தைப் பற்றி நாங்கள் முறையிடுகின்ற நான்காவது ஜனாதிபதியாக நீங்கள் இருக்கிறீர்கள்.

ஆகவே இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக உரிய சிலாபத்துறை கடற்படை முகாமிற்கு ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்பையும், அங்கு வசித்து வந்தவர்களுக்குரிய உடைமைகளையும் அவற்றின் உண்மையான உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைத்து விடுமாறு உங்களிடம் வேண்டிக் கொள்கிறேன்.

இவ்வாறே திருகோணமலையிலும் மாபல் பீச், வெள்ளை மணல், குடாக் கரை கடலோரம் மிகவும் வனப்பு மிக்கவை. விமானப் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அதனை உல்லாச பயணிகளை ஈர்க்கும் விதத்தில் பயனுள்ளதாக. முதலீடுகளை மேற்கொண்டு அபிவிருத்தி செய்வதற்கு முடியாமல் இருப்பதாகவும் அத்துடன் பிரதேச மக்களின் அன்றாட வாழ்வாதார நடவடிக்கைககள் பாதிக்கபடுவதாகவும் மு.கா. தலைவர் ஹக்கீம் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு பொது மக்கள் செல்வது கட்டுப்படுத்தப்படுத்தப்படுவது பற்றி கூறியபோது, அது தளர்த்தப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை தகர்க்கப்பட்ட பள்ளிவாசலின் அமைவிடம் உட்பட்ட கருமலையூற்று கடலோரப் பிரதேசத்தின் நிலைமையையும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த பிரச்சினைகள் பற்றியும் உரிய கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அனர்த்த முகாமைத்துவ சபை கடந்த மூன்று வருடங்களாக கூட்டப்படாமல் இருப்பது பற்றி ஜனாதிபதியின் கவனத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கொண்டு வந்தபோது, அதற்குரிய புதிய உறுப்பினர்கள் பெயரிடப்பட்டு, அதன் பின்னர் அதனை மீண்டும் இயங்க வைப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள்ளார்.

## ஆயிரமாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனவ்வரின் 'ஆயிரமாவது குத்பா அஞ்சலும்- வரலாறும்' நூல் வெளியீட்டு விழா நாளை (22) பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு 7 இல் உள்ள புதிய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் கல்வி முன்னேற்ற சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த விழா அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொருளாலர் அஷ்ஷெய்க் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதிகளாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ, இலங்கை பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலிஹ், தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முழப்பர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி லபார் தாஹிர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.நவாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தென்கிழக்கு பல்கலைக்கழக பீடாதிபதி பைஸர் முஸ்தபா, முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், சூபி தரீக்காக்களுக்கான சுப்ரீம் கவுன்சில் தலைவர் அல்ஹாஜ் அஷ்ஷெயித் நகீப் மௌலான, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் வை.எல்.எம். நவவி ஆகியேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலாய்வினை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் நிகழ்த்தவுள்ளார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். ரிஸ்வி முப்தி அவர்களும் இன்னும் பல வர்த்தக பிரமுகர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், நிர்வாகிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

'நாவுக்கு அரசர்' 'இலக்கியச் செம்மல்' ஏ.ஜி.ஏ அஹமட் ரிபாயி, அல்ஹாஜ் நியாஸ் அஹமட், அல்ஹாஜ் எஸ். எம். முபாரக் அலி ஆகியோரும் தென்னிந்தியாவிலிருந்து இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றார்கள்.

வெளிநாட்டு விசேட அதிதியாக மௌலானா அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அப்துல் காதிர் அல்காதிரி அல்அஸ்ஹரி கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் விசேட அம்சங்களாக உலமா பெருந்தகைகளும் ஊடகப் பெருந்தகைகளும் 8 தசாப்தங்கள் தாண்டிய ஆசிரியப் பெருந்தகைகளும் கௌரவிக்கப்படவுள்ளனர்.



# இளம் தொழிலதிபர் நுஸ்கி நஸீர்

# வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு







இளம் தொழிலதிபர் நுஸ்கி நஸீர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. Leads Holdings Group of Companies PVT (LTD), மற்றும் Global Consulting ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளராக இருக்கக் கூடிய நுஸ்கி நஸீர் தனது சிறு வயது முதல் சமூக சேவை விடயங்களில் ஆர்வமுடையவராகவும், கல்வி சார்பான பல்வேறு விடயங்களுக்கு கரம் கொடுத்து வருபவராகவும் திகழ்கின்றார். எதிர் வரும் காலங்களில் குறிப்பாக மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கான வேலைத் திட்டங்கள் Motivation Programs, பாதணிகள் வழங்குதல், கல்வி சார் முன்னேற்ற வேலைத் திட்டங்கள் நுஸ்கி நஸீர் foundation மூலம் நடாத்தப்பட இருக்கின்றது என்றும் தனது பிறந்த நாளை முன்னிட்டு நடந்த நிகழ்வுகளில் தெரிவித்தார். தேயிலை வர்த்தக அமைப்புகளின் முன்னனி வலையமைப்பாக இருக்கக் கூடிய Ayyash Brothers நிறுவனம், Leads Holdings Group of Companies, Global Consulting நிறுவனங்களின் மூலம் தனது தனிப்பட்ட நிதி ஒதுக்கீடு மூலம் அதிகமான கல்வி சார் முன்னேற்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.





# அரபுகள் ஒரே அணியில்..... அமெரிக்கா பதட்டம்!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அரபுகள் முழுமையாக இணைந்து காசா பாலஸ்தீன பிரதேசம் மக்களுக்கு மட்டுமே உரித்தான ஒன்றாக இருக்கும். இந்த நிலத்தில் இருந்து ஒரு துண்டை கூட அந்நிய சக்திகள் கைப்பற்ற முடியாது என்று தெளிவாக தெரியப்படுத்தி விட்ட போதும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தற்போது வாய் சாடலில் ஈடுபட்டு வருவதைக் காண கூடியதாக இருக்கிறது.

நான் கூறுவதை தான் இந்த உலகம் கேட்க வேண்டும். ஏன் என்று கேள்வி கேட்க கூடாது என்று அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போது கூறி வரும் நிலையில் அவர்களால் தற்போதைய நிலையில் ஏதும் செய்யமுடியாத நிலையில் தான் அவர்கள் (அமெரிக்கா -- இஸ்ரேல்) ஆகிய இரண்டு தேசங்களும் நின்று கொண்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. கடந்த 15 ந் தேதி சனிக்கிழமை எங்கள் கோரிக்கைகளை ஏற்று கொள்ள முன்வராத நிலையில் மீண்டும் நாங்கள் காசாவை நரகத்திற்கு கொண்டு செல்வோம் என மிரட்டிய அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போது ஏதும் செய்ய முடியாத நிலையில் இனி நாம் எடுப்பதற்கு ஏதும் இல்லை. எந்தவொரு முடிவாக இருந்தாலும் அதனை முறைப்படி முடிவு எடுக்க அனைத்து உரிமைகளும் இஸ்ரேலிய நாட்டிற்கு மட்டுமே உண்டு என்று கூறி இருப்பது ஒரு வகையில் பிரச்சினையை விட்டு அமெரிக்கா நழுவி செல்ல முயலுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதற்கிடையில் கடந்த ஜனவரி 19 அன்று போர் நிறுத்தம் அமலுக்கு வந்ததிலிருந்து இது ஆறாவது பரிமாற்றமாகும். சனிக்கிழமைக்கு முன்பு, போர் நிறுத்தத்தின் முதல் கட்டத்தின்போது 21 பிணைக் கைதிகள் மற்றும் 730 க்கும் மேற்பட்ட பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்ட இஸ்ரேலியர்கள் மூவரை ஹமாஸ் இயக்கம் விடுவித்தது. பதிலுக்கு, நூற்றுக்கணக்கான பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவித்தது.

கடந்த 2023, அக்டோபர் முதல் காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 48,219 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். இந்நிலையில், இஸ்ரேல் – ஹாமாஸ்கள் இடையே கடந்த ஜனவரி 19-ம் தேதி முதல் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. போர் நிறுத்தத்தின் முக்கிய கொள்கைகளை இஸ்ரேல் மீறிவிட்டதாக குற்றம்சாட்டிய ஹமாஸ், கடந்த 15 ந் தேதி (சனிக்கிழமை) விடுவிக்கப்பட இருந்த 3 இஸ்ரேலியக் கைதிகள் விடுவிக்கப்பட மாட்டார்கள் என்று முதலில் கூறியது. இதன் பின்னர் கத்தார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் தீவிர சமரச பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் இந்த தீர்வு எடுக்கப்பட்டது.

இதற்கிடையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ”சனிக்கிழமை மதியத்துக்குள் ஹமாஸ் பிணைக் கைதிகளை விடுவிக்கவில்லை என்றால் போர் நிறுத்தம் முடிவுக்கு வந்து விடும். ஹமாஸ்கள் இறுதியாக தோற்கடிக்கப்படும் வரை, இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தும்” என்று தெரிவித்திருந்தார்.

மிகப்பெரிய அளவிலான தோல்வியை தழுவிய நிலையில் இஸ்ரேல் நாட்டில் உள்நாட்டு குழப்பம் மற்றும் போராட்டம் வலுவடைந்து வரும் நிலையில் பெஞ்சமின் நிதான்யாகு என்ன செய்வது என்பது தெரியாமல் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை சந்தித்து வரும் நிலையில் தான் கீழ் விழுந்த நிலையிலும் மீசையில் மண் ஒட்டாத நிலையில் பேசிக் கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் தெற்கு காசா பகுதியில் இருந்து ஐயர் ஹார்ன் (வயது 46), சாகுய் டெக்கல் சென்(36), அலெக்சாண்டர் (சாஷா) ட்ரூஃபனோவ் (29) ஆகியோரை ஹமாஸ் போராளிகள் விடுவித்தனர். பிணைக் கைதிகளின் விடுதலைக்கு ஈடாக, இஸ்ரேல் 369 பாலஸ்தீன கைதிகளை விடுவிக்கத் தொடங்கியது. இதில் கொடூரமான சித்திரவதைக்கு உட்பட்டு வரும் பாலஸ்தீன ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 36 பேரும் அடங்குவர்.

இதற்கிடையில் டிரம்பின் காசா தொடர்பான அறிவிப்புகள் சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.காசாவை நாங்கள் எடுத்துக் கொண்டு சுற்றுலா தலமாக மாற்றி காட்டுவோம்.யாரும் எங்களுக்கு காசாவை தர வேண்டாம் என்று மிகவும் அகந்தையுடன் தான் அந்த கருத்தை வெளிப்படுத்தி வந்தார். அதேசமயம் அமெரிக்கா பல்டி அடித்தது. மீண்டும் பழையபடி அதே கருத்தை கூறி வந்த நிலையில் தான் இதற்கு உலகில்

பல்வேறு நாடுகள் எதிர்ப்பும் தெரிவித்தன. இந்த நிலையில், டிரம்பின் அறிவிப்பு தொடர்பாக பேசிய வெள்ளை மாளிகை அதிகாரிகள், பாலஸ்தீனியர்களை தற்காலிமாக வேறு இடம் மற்றுவதாக மட்டுமே டிரம்ப் கூறியதாக தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில்,

“15 மாதங்களாக நடைபெற்ற போரினால் ஏற்பட்ட பாதிக்கப்பட்டுள்ள காசாவை மறுகட்டமைக்கும் வரை, இடைக்கலாமாக மக்கள் வேறு இடத்திற்கு செல்ல வேண்டியிருக்கும்” என்று கூறியுள்ளனர். இதன் மூலம் பாலஸ்தீனியர்கள் நிரந்தரமாக வெளியேற்றப்படமாட்டார்கள் என அமெரிக்கா தற்போது விளக்கம் அளித்து இருக்கிறது. எனினும் டிரம்ப் இது தொடர்பாக எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கை சில நாட்கள் முன்பு வெளியானது.

ஆனால் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பெஞ்சமின் நிதான்யாகு உடன் அமர்ந்து கொடுத்த செவ்வியில் காசாவிலிருந்து சுமார் 23 லட்சம் பாலஸ்தீனியர்களை வெளியற்றி, வேறு இடங்களில் அவர்களை குடியமர்த்தும் திட்டத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். இந்த யோசனையை இஸ்ரேல் வரவேற்றுள்ளது. அதேநேரத்தில், பாலஸ்தீனியர்களும், அரபு நாடுகளும் இதனை நிராகரித்துள்ளன.

மேலும், பாலஸ்தீனியர்கள் அருகில் உள்ள எகிப்து, ஜோர்டான் உள்ளிட்ட பிற மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று பாதுகாப்பாகவும், அமைதியாகவும் வாழலாம் என்றும் டிரம்ப் கூறினார்.

இது போன்ற குழப்பம் நிறைந்த சூழலில் பணயக்கைதிகளை விடுவிப்பதை மறு அறிவிப்பு வரும் வரை ஒத்திவைப்பதாக ஹமாஸ் விடுத்த அறிவிப்பிற்கு பதிலளிக்கும் விதமாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறிய வார்த்தைகள் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

ஹமாஸ் கடந்த திங்கட்கிழமை, போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறியதாகக் குற்றம் சாட்டியது. மேலும், “அடுத்த அறிவிப்பு வரும் வரை” இஸ்ரேல் பணயக்கைதிகளை விடுவிப்பதை நிறுத்திவைக்கப் போவதாகவும் அறிவித்தது.

ஹமாஸை எச்சரிக்கும் விதமாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், காஸாவில் உள்ள அனைத்து பணயக்கைதிகளையும் 15 ந் தேதி சனிக்கிழமைக்குள் விடுவிக்காவிட்டால் போர்நிறுத்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று இஸ்ரேலுக்கு பரிந்துரைத்தார்.

ஹமாஸ்”க்கு பதிலளிக்கும் விதமாக காஸாவை சுற்றியுள்ள பகுதிகளில் இஸ்ரேலியப் படைகளை குவிக்க உத்தரவிட்டதாக பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

பெஞ்சமின் நெதன்யாகு, ஹமாஸ் விடுவிக்க வேண்டிய 76 பணயக்கைதிகளையும் திருப்பி அனுப்பக் கோருகிறாரா என்பது தெளிவுப்படுத்தப்படவில்லை. இருப்பினும், இஸ்ரேலிய அமைச்சர் மிரி ரெகேவ் அனைத்து பணயக்கைதிகளையும் என்று குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த ஹமாஸ் தரப்பு, ”போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உறுதியாக இருப்பதாகவும், எந்தவொரு சிக்கல்களுக்கும் அல்லது தாமதங்களுக்கும் இஸ்ரேல் தான் பொறுப்பு” என்றும் தெரிவித்துள்ளது.

முன்னதாக, போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறியதாகவும், மனிதாபிமான உதவிகளைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் காஸா குற்றம்சாட்டியதை இஸ்ரேல் மறுத்துள்ளது.

ஒருவேளை ஹமாஸ் அறிவித்தது போல, பணயக்கைதிகளை சனிக்கிழமைக்குள் திருப்பி அனுப்பாவிட்டால், ”பேரழிவு வெடிக்கும்” என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்திருந்தார்.

செவ்வாயன்று இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவையின் நான்கு மணி நேர கூட்டத்திற்குப் பிறகு, நெதன்யாகு ஒரு காணொளி அறிக்கையில் ”அதிபர் டிரம்பின் கோரிக்கையை வரவேற்பதாக” கூறினார்.

டிரம்பின் கருத்துக்கள் “இனவெறி மற்றும் பாலத்தீனிய அடிப்படையை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட இன சுத்திகரிப்புக்கான அழைப்பு“ என்று ஹமாஸ் விவரித்தது.

ஐ.நா, அரேபிய நாடுகள் மற்றும் பிற உலகத் தலைவர்களும், மனித உரிமைக் குழுக்களும், பாலத்தீன ஆணையமும் அவரது கருத்துக்குக் கண்டனம் தெரிவித்தனர்.எந்தவொரு கட்டாய இடப்பெயர்வும் சர்வதேச சட்டத்தின் கீழ் தடை செய்யப்படும் என்றும், அது இன சுத்திகரிப்புக்கு சமமானதாகும்“ என்று ஐ.நா. எச்சரித்தது.“காஸா குறித்த அமெரிக்க அதிபரின் புரட்சிகர பார்வையை பாராட்டுவதாக““ நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

முன்னதாக செவ்வாய்க்கிழமை அன்று, ஹமாஸின் மூத்த அதிகாரி பசிம் நயீம் ”அமெரிக்கா, கத்தார் மற்றும் எகிப்து நாடுகளின் மத்தியஸ்தர்கள் தலையிட்டு போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான வழி இன்னும் திறந்திருக்கிறது” என்று கூறினார்.

இந்த ஒப்பந்தம் தோல்வியடைவதை நாங்கள் விரும்பவில்லை. இதில் எந்தவொரு தடைகளையும், சவால்களையும் தவிர்க்க நாங்கள் அதிகபட்சமாக முயற்சி செய்கிறோம். எனவே மத்தியஸ்தர்கள் மூலம் நிலைமை சரிசெய்யப்பட்டால், அடுத்த சனிக்கிழமை கைதிகளை ஒப்படைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.” என்றும் அவர் கூறினார்.

வடக்கு காஸாவில் உள்ள பகுதிகளுக்கு பாலத்தீனியர்கள் திரும்புவதை பலமணிநேரங்கள் தாமதப்படுத்தியது முதல் உணவு, மருத்துவம் மற்றும் தங்குமிடம் போன்ற அவசர உதவிகளின் விநியோகங்களை தடுத்தது உட்பட, இஸ்ரேல் போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து மீறுவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

அமெரிக்கா விதிக்கும் இது போன்ற அழுத்தம் அவர்களின் நட்பு நாடுகளாக இருந்து வரும் பிரான்ஸ், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஜெர்மன் ஆகிய நாடுகள் கூட முழுமையாக எதிர்க்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.இது போன்ற மனித நேயமற்ற வெளியேற்றத்தை யாரும் ஏற்றுக் கொள்ள முன்வராத நிலையில் ட்ரம்ப் நான் கூறுவதை தான் இந்த உலகம் ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும் என்று சர்வாதிகார அடிப்படையில் பேசி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது.நிச்சயமாக இது போன்ற அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் நாகரீகமான சமூகத்தில் வெளிப்படையாக நடந்து வரும் நிலையில், இது தொடர்ந்தால் அரபுலகத்தை தாண்டி பல்வேறு நாடுகளின் இறையாண்மை கேள்விக்குறி ஆக மாறி விடும் என்பதை தான் உலக நாடுகள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. குறிப்பாக, அரபு நாடுகள் மிகவும் தெளிவாக உணர்ந்து செயல்பட்டு வருவதை தான் தற்போது காண முடிகிறது.

இதற்கிடையில் ஜோர்டான் அதிபரை அழைத்து பேச்சுவார்த்தை என்ற அடிப்படையில் பல்வேறு அழுத்தங்களுக்கு அவர் உட்படுத்தப்பட்ட நிலையில் எகிப்து அமெரிக்கா அரசின் அழைப்பை முற்றிலுமாக நிராகரிப்பு செய்தது.

அமெரிக்கா 8 பில்லியன் டாலர் பெருமானமுள்ள ஆயுதங்களை இஸ்ரேலுக்கு வழங்க அனுமதி அளித்தது. இதில் 2000 பவுண்ட் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான வெடிபொருட்கள் மற்றும் பல்வேறு ராட்சத ஆயுதங்களை சப்ளை செய்வது என்று முடிவு செய்து விட்டது.

அமெரிக்கா விதிக்கும் இந்த மோசமான நிபந்தனைகள் உலகத்தை அதிர்ச்சி அடைய செய்யும் நிலையில் தான் யூத சியோனிச வலதுசாரி அமைச்சர் ஈத்தாமர் பென் கேவிர் பாலஸ்தீன மக்களை அங்கிருந்து வெளியேற்ற குண்டுகளை வீசி கொல்லப்பட வேண்டும் என்று கூறினார். அதே சமயம் அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுத்துள்ள இந்த நடவடிக்கையை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு உடனடியாக அமல்படுத்த முன் வர வேண்டும் என்று வேண்டுகோளை வைத்தார் என்பது தான் உலகையே அதிர்ச்சி அடைய வைத்த செய்தியாக உள்ளது.

அதேநேரத்தில், எகிப்து அதிபர் அப்துல் பத்தா சிசி சர்வதேச அரபுகள் கூட்டத்தை இந்த மாதம் 28 ந் தேதி கெய்ரோவில் கூட்டி இருக்கிறார் .

எகிப்து நாட்டின் அதிகாரப்பூர்வ நாளிதழ் அல் அஷ்ரம் செய்தி வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: காசாவில் பாதுகாக்கப்பட்ட ஏரியாவை உருவாக்க வேண்டும். அங்கு பாலஸ்தீனியர்களை வாழ வைத்து எகிப்து மற்றும் சர்வேதச கட்டுமான நிறுவனங்கள் கட்டட கழிவுகளை அகற்றி புதிய கட்டுமானங்களுடன் காசாவை மறுஉருவாக்கம் செய்யும். இதுதொடர்பாக எகிப்து அரசு ஐரோப்பா, சவுதி அரேபியா, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளது““ என்று கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக 2 எகிப்து அதிகாரிகள் பிற நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர். இந்த பேச்சுவார்த்தையின் காசாவை மறுஉருவாக்கம் செய்வதற்கான நிதி உதவி பற்றி விவாதித்து வருகின்றனர். இந்த பேச்சுவார்த்தை என்பது தற்போது தொடக்க நிலையில் தான் உள்ளது. அதே நேரத்தில் எகிப்து காசாவை மறு கட்டமைப்பு செய்யும் வேலையை நன்றாகவே செய்து வரும் நிலையில் அமெரிக்கா அதிர்ச்சி அடைந்த நிலையில் தற்போது ஏதும் செய்ய முடியாத நிலையில் அமெரிக்கா வெளிவிவகார துறை செயலாளர் மார்க் ருபியோ மத்திய கிழக்கு நாடுகளுக்கு தற்போது பயணம் மேற்கொண்டு வருவதையும், அதில் பொதிந்துள்ள மனித நேயமற்ற அரசியலையும் காண முடிகிறது.

தற்போது அமெரிக்கா மீண்டும் காசாவில் உள்ளவர்களை எகிப்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி உள்ளது. இது எகிப்துக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தும். இதனால் தான் அமெரிக்காவின் முடிவுக்கு எகிப்து எதிர்ப்பு தெரிவித்து உள்ளதோடு, பிற நாடுகளுடன் சேர்ந்து காசாவை புதிதாக கட்டமைக்க முடிவு செய்துள்ளது. இந்த நிலையில் எகிப்து அமெரிக்காவை எதிர்த்து பிற நாடுகளின் உதவியுடன் காசாவை மேம்படுத்த முடிவு செய்துள்ளது.

எகிப்து தற்போது எடுத்து வரும் நடவடிக்கைகள் அடிப்படையில் 5 ஆண்டுகளில் காசாவை மறு கட்டமைப்பு செய்யும் வேலையில் இறங்கி உள்ளதாக அந்த நாடு தெரிவித்து உள்ளது இதற்காக எகிப்து, துருக்கி, கத்தார் மற்றும் பல்வேறு அரபுகள், அதனைத் தாண்டி ஐரோப்பிய சமூகமும் பொருளாதார உதவிகள் செய்ய தயாராக இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன

இந்த நடவடிக்கையை துரிதப்படுத்தும் வேலை தற்போது துவங்கிய நிலையில் தான் சவூதி அரேபியா ரியாத்தில் சவூதி அரேபியா உட்பட ஐந்து நாடுகள் கூடி விவாதித்து வருகின்றன. சவுதி அரேபியா வின் தீவிர முயற்சி மற்றும் பாலஸ்தீன பிரதேச மக்களுக்கு ஆதரவாக செயல்பாடுகளை கண்ட அமெரிக்கா ஆடி போய் இருப்பதாகவே அறிந்து கொள்ள முடிகிறது. அதாவது, அமெரிக்காவின் குறுக்கு வழி முயற்சி முழுமையாக தோல்வியை சந்தித்து வருவதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

ஈரான், சவூதி அரேபியா, எகிப்து, கத்தார், துருக்கி ஏனைய ஆப்ரிக்கா இஸ்லாமிய குடியரசு நாடுகள் ஒருமித்த குரலில் காசா பாலஸ்தீன மக்களுக்கு என்பதே அதுவாக இருந்து வருகிறது.இதற்கிடையில் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான ஒசாமா ஹமதன் அறிக்கையில் அரபுகள் ஒன்றுபட வேண்டிய மிகவும் முக்கியமான தருணம் வந்து விட்டது என்று வெளிப்படையாக கருத்தை தெரிவித்துள்ளார் . மேற்குலக நாடுகளின் பகட்டை அரபுகள் தவிர்க்க வேண்டும். என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா இந்த பிரச்சினையில் அரபுகள், யூதர்கள் மோதலை வலுப்படுத்தி அதன் மூலம் தமக்கென சுயாதீன பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள பல்வேறு நிலைகளில் முயற்சி செய்து வருவதே யதார்த்தமான உண்மையாகும்

அதே சமயம் அமெரிக்காவின் பரம வைரியான ஈரானை மட்டுப்படுத்தப்பட்ட பாலஸ்தீன பிரச்சினையை பயன்படுத்த முயற்சி செய்து வருவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



மத்திய கிழக்கு நாடுகளில் சீனா, ரஷ்யா வின் ஆதிக்கம் நிலை பெறாமல் இருக்க வேண்டும் என்றால் அதற்கு அங்கே ஒரு தடைக் கல்லாக இஸ்ரேலிய தேசத்தை மட்டுமே பயன்படுத்த முடியும். நிரந்தர அமைதி ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கா செயல்பட்டு வருவதாக அந்த நாடு தெரிவித்து வருகின்ற போதிலும், அந்த பிராந்தியத்தில் நிலையான பதட்டம் மட்டுமே அமெரிக்காவின் இன்றைய தேவையாக இருக்கிறது.

# சவாலாகும் பட்ஜெட்?



எம்.எஸ். அமீர் ஹுசைன்



உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை விரைவாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்த தேர்தல் 2025 ஏப்ரில் மாதம் இறுதி வாரத்தில் நடத்தப்படலாம் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. அதே நேரம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலம் 2025.02.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது. இவ்விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சி உட்பட நான்கு அரசியல் கட்சிகளால் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கிற்கான தீர்ப்பை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவித்திருப்பதால் அந்த தீர்ப்பை சபாநாயகர் அறிவிப்பதற்காக எதிர் வரும் 17 ஆம் திகதி பாராளுமன்றம் கூட இருக்கின்றது.

இதற்கிடையில் கடந்த 05 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய போது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் அறிவிப்பார் என்று தகவல்கள் வெளியாகி இருந்த போதும் அது வரையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு அறிவிக்கப் பட்டிருக்கவில்லை. ஆனாலும் தற்போது உயர் நீதிமன்றம் அந்த வழக்கிற்கான தீர்ப்பை ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கு அறிவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்திருப்பதால் 2025.02.10 ஆம் திகதி பிரதி சபாநாயகர் கலாநிதி ரிஸ்வி சாலி தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற விவகாரங்களுக்கான நிறைவேற்று குழுக் கூட்டத்தில் இந்த சிறப்பு ஏற்பாடுகள் தொடர்பான சட்டமூலத்தை 17 ஆம் திகதியே விவாதிப்பது என தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. எதிர்வரும் 17 ஆம் திகதி பி.ப. 2.00 மணியில் இருந்து இரவு 7.00 மணி வரையில் இந்த சட்டமூலம் தொடர்பான விவாதம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

ஏற்கனவே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை பிற்போட்டமைக்கு எதிராக ரனில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாக இருந்த போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கான உத்தரவும் அப்போதைய அரசாங்கம் இயன்ற வரை அவசரமாக இந்த தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்பதாகும். ஆனாலும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்கள் நடாத்தப்பட்டதால் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்ந்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாததாக மாறிவிட்டது.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்கனவே தேர்தலுக்கு முன்னர் வழங்கி இருக்கின்ற வாக்குறுதிகளின் அடிப்படையில் ஒத்திப் போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை 2025 ஆம் ஆண்டு நடாத்தி முடிப்போம் என்பதாகும்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்த போதும் அந்த தேர்தலை நடத்த பணம் இல்லை என்றும் வாக்கும் இல்லை, தேர்தலும் இல்லை, சட்டபூர்வமாக தேர்தல் ஆணைக்குழு தேர்தல் நடத்துவதென்று எந்த திகதியையும் நிர்ணயிக்கவில்லை. அதனால் தேர்தலும் இல்லை என்றும் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி நடாளுமன்றத்தில் அறிவித்தார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது நாட்டு மக்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்த மறக்க முடியாத சம்பவமாகும். தேர்தல் ஒன்று நடைபெறும் என்று உத்தியோக பூர்வமாகவோ அல்லது அரசியல் அமைப்புக்கு அமைவாகவோ எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி அதி உன்னதமான சட்டவாக்க சபையான நாடாளுமன்றத்தில் அன்றைய தினம் அறிவித்தமையானது பாராளுமன்றத்தில் மட்டுமல்லாது நாட்டிலும் அவரை ஒரு மிஸ்டர் பீன் போன்று அனைவரும் பேச ஆரம்பித்தனர்.

2023 ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அதில் இருந்து அரசியல் கட்சிகள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இறங்கி தேர்தல் நடக்கலாம் என்ற நம்பிக்கையில் மும்முரமாக ஈடுபட்டு பெருமளவான தொகைகளை செலவு செய்தும் இருந்தன. ஆனாலும் தேர்தல் நடத்த அதற்கான 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் இல்லை என்று நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா தெரிவித்து அப்போதைய சந்தர்ப்பத்தில் நிலைமைகளை தலைகீழாக மாற்றியமைத்தார். இவ்வாறாக தேர்தல் நடத்த ஒதுக்கீடு செய்யப்பட்ட 1000 கோடி ரூபா பணத்தை அதற்காக வழங்காமல் பிற்போடப்பட்ட தேர்தலையே இப்போது ஏப்ரில் மாதம் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

விஷேட சிறப்பு எற்பாடுகள் சட்டமூல விவாதத்தில் பிரதானமாக ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்து புதிதாக வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய தேர்தல் ஆணைக்குழு கால அவகாசம் வழங்குதல், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணத்தை அந்தந்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களுக்கு மீளச் செலுத்துவதா அல்லது புதிதாக வேட்புமனுக்களை சமர்ப்பிக்கும் போது 2023 ஆம் ஆண்டு செலுத்தி கட்டுப்ப ணத்தை செல்லுபடியானதாக்குவதா போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட இருக்கின்றது. அத்துடன் எந்த வருடத்தின் தேர்தல் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட தேர்தல் வாக்களிப்பு பதிவுகளின் அடிப்படையில் தேர்தலை நடத்துவது போன்ற விடயமும் ஆராயப்பட இருக்கின்றது.

இந்நிலையில் அரசியல் கட்சிகளும் தற்போது தயாராகிக் கொண்டிருக்கின்றது. அத்துடன் 2025.02.17 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தையும் நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றார். வரவு செலவுத் திட்ட உரை 12.30 மணி வரையில் இடம்பெற இருக்கின்றது.

அதன் பின்னர் பி.ப. 2.00 மணியில் இருந்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதம் நடைபெறும். அரசியல் கட்சிகள் திருத்தங்களை சமர்ப்பிப்பதாக இருந்தால் 17 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் அவற்றை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம் அறிவித்திருக்கின்றது.

அதே நேரம் இவ்வாறு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படலாம் என்ற அறிவிப்பை தொடர்ந்து தேசிய மக்கள் சக்தியான சஜித் பிரேமதாசா தலைமையிலான சமகி ஜனபலவேகய கட்சி ரனில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐ.தே.கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருக்கின்றது என்ற ஒரு தரப்பும் வெற்றியளிக்கவில்லை என்று இன்னொரு தரப்பும் கூறி வருகின்றனர்.

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஒரு தரப்பினர் ஐ.தே.க. வுடன் நடாத்தும் பேச்சுவார்த்தை குறித்து அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். கடந்த கால திருடர்களுடன் எதற்காக பேச்சு நடத்த வேண்டும்? ஐ.தே.க. என்ற ஒரு கட்சியோ அல்லது அக்கட்சிக்கான வாக்குகளோ இல்லை என்றும் கூறி வருகின்றர்.

குறிப்பாக இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஆனாலும் இதுவரையில் கட்சி தலைவர் மட்ட ரனில் சஜித் பேச்சுக்கள் நடக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சவூதி அரேபிய ஸ்தாபகர் தினமும் இலங்கையுடனான 50 ஆண்டு நிறைவும்



**அஷ்ஷைக் எம்.எச் ஷைஹுத்தீன்** பீ.ஏ. மதனி
**பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு**



“இமாம் முஹம்மது பின் ஸஊத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் சவுதி அரேபிய இராச்சியத்தை ஸ்தாபித்த ஆண்டு நிறைவு நாள் பெப்ரவரி 22ஆம் திகதியாகும்”.

”மூன்று நூற்றாண்டுகள் கடந்துள்ள சூழலில் சவுதி அரேபியாவை உலக வல்லரசுகளோடு போட்டி போட்டு பல துறைகளிலும் முன்னேற்றமடைந்த நாடாக மாற்றியமைத்த பெருமை புனித இரு பள்ளிவாசல்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் பிரதமரும் பட்டத்து இளவரசருமான முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் ஆகியோரைச் சாரும்”.

”மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் பிரதமரும் பட்டத்து இளவரசருமான முஹம்மத் பின் சல்மான் மற்றும் இலங்கைக்கான சவுதி அரேபிய தூ துவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி ஆகியோரின் பணிகளையும் சேவைகளையும் அல் ஹிக்மா நிறுவனம் பாராட்டுகிறது.”

இமாம் முஹம்மது பின் ஸஊத் (ரஹ்) அவர்கள் சவுதி அரேபிய இராச்சியத்தை ஸ்தாபித்த ஆண்டு நிறைவு நாள் பெப்ரவரி 22ஆம் திகதியாகும். இந்நாள் திருக்குர்ஆன், சுன்னா ஒளியில் நீதியையும் கருணையையும் கொண்டு ஆட்சி செய்யும் உன்னத அரசை ஸ்தாபித்த நாட்களில் சிறந்த நாளாக விளங்குகிறது. இது சகல மக்களும் மகிழ்ச்சியும் கண்ணியமும் பெருமையும் பெற்றுக்கொண்ட உன்னத வரலாற்று நாட்களில் ஒன்றாகும்.

இமாம் முஹம்மது பின் ஸஊத் (ரஹ்) அவர்கள் திர்இய்யாவில் வாதி ஹனீபா எனும் இடத்தில் இருந்து தான் சவுதி அரேபியாவின் ஸ்தாபக நாளை ஆரம்பித்தார். அங்கிருந்து நாட்டின் பொருளாதாரம், பாதுகாப்பு போன்றவற்றை ஸ்தீரப்படுத்தினார். நஜ்த் மாகாணத்தில் உள்ள அனைத்து பகுதிகளையும் ஒன்றுபடுத்தி ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தார். அத்தோடு வெளிமாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள் எவ்வித அச்சமுமின்றி தங்களது வியாபாரங்களை மேற்கொள்ள திர்இய்யாவை பாதுகாப்பான வியாபார கேந்திர மையமாகவும் வெளிமாவட்டங்களில் இருந்து புனித ஹஜ், உம்ரா கிரியைகளை நிறைவேற்ற வரும் யாத்திரிகர்களுக்கு பாதுகாப்பான பாதையாகவும் ஆக்கி வைத்தார்.

இமாம் முஹம்மது பின் ஸஊத் (ரஹ்) அவர்கள் நஜ்த் பிரதேசத்தில் திர்இய்யாவில் ஆரம்பித்த சவுதி அரேபிய ஸ்தாபக பயணத்தில் பல முக்கிய சாதனைகளை நிலைநாட்டினார். அதாவது திர்இய்யா பகுதியைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அங்கு அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தினார். உள்ளூர் மக்களின் பாதுகாப்பை மாத்திரமல்லாமல் அயற்பிரதேசங்களின் பாதுகாப்பையும் பலப்படுத்தினார். அதன் ஊடாக எவரது தலையீடுகளும் இன்றி தனித்துவமான அரசியலை ஸ்தீரப்படுத்தினார். ஆன்மீக சீர்திருத்தங்களையும் அவர் மேற்கொண்டார்.

அன்றைய அண்டை நாடுகளை சவுதி அரேபியாவுடன் இணைந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்தார். தனது நாட்டுக்கு எதிரான அனைத்து சவால்களையும் முறியடித்த அவர், நாட்டின் பெருளாதாரத்தையும் ஒழுங்குபடுத்தினார். நஜ்த் பிராந்திய மாகாணங்களையும் ஒன்றுபடுத்தினார். குறிப்பாக வெளித் தாக்குதல்களில் இருந்து திர்இய்யாவைப் பாதுகாக்க முழு பகுதியிலும் பாதுகாப்பு சுவர் அமைத்தார். அத்தரபிய்யா எனும் இடத்தை தனது ஆட்சிக்குரிய தலைமையகமாக அமைத்தார். அதன் ஊடாக அனைத்து துறைகளிலும் தனித்துவம் மிக்க இராச்சியமாக உருவானது சவுதி அரேபியா.

அன்று தொடக்கம் சவுதி அரேபியாவை ஆட்சி செய்த தலைவர்கள் அனைவரும் மிகச் சிறந்தவர்களாகவும், அனைவராலும் போற்றப்படுகின்றவர்களாவும் விளங்குகின்ற போதிலும் இமாம் முஹம்மது பின் ஸஊத், மன்னர் அப்துல் அஸீஸ் (ரஹ்) ஆகியோர் சவுதி அரேபியா எனும் சிறந்த இஸ்லாமிய ஒரு நாட்டை உருவாக்கிட அளப்பரிய பங்களிப்புக்களை நல்கியவர்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

பாரிய அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் ஊடாக இச்சிறப்பான தேசம் கட்டியெழுப்பப்பட்டது. என்றாலும் அதனை எதிர்கால சந்ததியினருக்கும் சிறந்த முன்மாதிரியுள்ள நாடாகவும், மனிதாபிமானத்தில் உலகத்தையே வென்ற நாடாகவும், உலக முஸ்லிம்களுக்கும், மத்திய கிழக்குக்கும் தலைமை தாங்கும் தேசமாகவும், பொருளாதாரம், நவீன ஆயுத பலம், படைப்பலம், பல நவீன கண்டுபிடிப்புகள் என அனைத்து விடயங்களிலும் உலக வல்லரசுகளோடு போட்டி போட்டு முன்னேற்றமடைந்த நாடாகவும் மாற்றியமைத்த பெருமை தற்போதைய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், பிரதமரும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸ ீஸ் ஆல் சஊத் ஆகியோரையே சாரும்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட சவுதி அரேபியா, கட்டம் கட்டமாக சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து இன்று உலகில் மிகவும் வளர்ந்த நாடாக மாறியுள்ளதைக் காண முடிகிறது.

மேலும் உலகிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் சவுதி அரேபியாவை விஞ்சும் அளவுக்கு வேறு நாடுகள் இல்லை. அந்தளவுக்கு பயங்கரவாதத்தைத் தங்களது நாட்டில் அடியோடு துடைத்தெறிந்த நாடாகவும் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ள நாடுகளில் பயங்கவாதத்தை ஒழிப்பதற்கு தேவையான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கும் தேசமாகவும் விளங்குகிறது சவுதி.

அதே போன்று ஊழல் ஒழிப்புக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கும் நாடாக சவுதி அரேபியா விளங்குகிறது. தங்களது நாட்டில் உயர்ந்தவர், அரச குடும்பம் என்று கூட பாராமல் ஊழல் செய்தவர் யாராக இருந்தாலும் அவரை சட்டத்தின் முன் நிறுத்தி தகுந்த தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவும் செய்கிறது சவுதி. அத்தோடு ஊழல் செய்யப்பட்ட பல கோடி ரியால்களை பறிமுதல் செய்து அரசுடமையாக்கிய பெருமையும் அந்நாட்டுக்குள்ளது.

எந்த நாட்டில் ஊழல் உள்ளதோ அந்த நாடு பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடியைச் சந்திக்கும். அத்தோடு பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலையையும் அடையும். ஊழல் ஒழிப்பு விடயத்தில் மிகவும் கடுமையாக இருப்பதால் சவுதி பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்துள்ளது எனலாம்.

மத்திய கிழக்கில் அரசியல் பலம் மிக்க நாடாக விளங்கும் சவுதி, உலகளவில் பாரிய அரசியல் பங்களிப்புகளைச் செய்யும் நாடாகவும் திகழ்கிறது. பல அற்புதமான கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரராகத் திகழும் அளவுக்கு சவுதி முன்னேறியுள்ளது. இது உலகுக்கே ஆச்சரியமான விடயமாகும். சவால்கள் பல சவுதி அரேபியாவுக்கு இருந்தாலும் அனைத்து சவால்களையும் தடைகளையும் தாண்டி சவுதி முன்னேற்றம் அடைந்து வருகிறது.

இதற்கு இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் 2030 நோக்கு பாரிய பங்களிப்பு நல்குகிறது. நியோம், த லைன், நவீன திர்இய்யா, கித்திய்யா, முகஅப், அல் உலா, மன்னர் சல்மான் பார்க், முஹம்மத் பின் சல்மான் விளையாட்டரங்கம், ரியாத் விமானம், அதி நவீன ஆயுத உற்பத்திகள் போன்றன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றின் ஊடாக உலகையே மெச்சும் அளவுக்கு பாரிய முன்னேற்றங்களை சவுதி அரேபியா கண்டு விட்டது.

மன்னர் சல்மானின் ”நமது நாடு அனைத்து நிலைகளிலும் வெற்றிகரமானதும் முன்னோடி மிக்கதுமான நாடாக இருக்க வேண்டும் என்பதே எனது முதல் இலக்கு. அதை அடைய உங்களுடன் இணைந்து பணியாற்றுவேன்” என்ற கூற்றும், முஹம்மத் பின் சல்மானின் ”ஒன்றாக, நாம் அனைவரும் எதிர்பார்க்கும் வகையில் நமது நாட்டைக் கட்டியெழுப்புவோம், வளமான, வலிமையான, அதன் ஆண் பெண் இருபாலாரின் முழுமையான ஒத்துழைப்புகளோடு அவர்களின் திறன்களிலிருந்தும் பயனடைவோம்” என்ற கூற்றும் சவுதி அரேபியாவை பாரிய முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு சென்று கொண்டிருக்கிறது எனலாம்.

இவ்வாறான சூழலில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஆலோசகர் ஜாரெட் கான்ஷர், “இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர், அவர் மத்திய கிழக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவார் என நான் நம்புகிறேன், மேலும் உலகை சிறந்த இடமாக மாற்றிய பல விஷயங்கள் அவரால் செய்ய முடிந்துள்ளதாக நான் நம்புகிறேன்“ என்றுள்ளார்.

அதேநேரம் அமெரிக்காவின் வெளியுறவு இதழ், சவுதி அரேபியா அதன் உறுதியான பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் கீழ் அதிக இலட்சியங்களை அடைந்ததாக மாறியுள்ளது.

இவை இவ்வாறிருக்க, சவுதி அரேபியாவின் அனைத்துத் தலைவர்களும் பலஸ்தீன மக்களுக்கு நிரந்தத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க பலதரப்பட்ட முயற்சிகளை தொடர்ந்தும்  முன்னெடுத்து வருகின்றனர். அந்த மக்களுக்குத் தேவையான அனைத்து விதமான மனிதாபிமான உதவிகளையும் செய்து வருகிறார்கள். அண்மையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் பலஸ்தீன மக்களை நாடு கடத்தி சவுதி அரேபியாவில் குடியமர்த்த வேண்டும் என்று தெரிவித்த கருத்தை இளவரசர் முஹம்மத் பின் சல்மான் உடனடியாக நிராகரித்தார். பலஸ்தீன மக்கள் நாடோடிகள் அல்லர். அவர்கள் அப்பூமியின் பூர்வீகக் குடிகள். அவர்கள் கடைசி வரை அங்கு தான் வாழ வேண்டும். அவர்களை பலஸ்தீனில் இருந்து வெளியேற்ற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் எனக் கடுந்தொனியில் குறிப்பிட்டார். அத்தோடு பல நாடுகளின் உள்நாட்டு யுத்தங்களை நிறுத்தவும் சமாதானத்தை நிலைநாட்டவும் அளப்பரிய சேவைகளைச் செய்யவும் சவுதி தவறவில்லை.

2023 இல் சவுதி அரேபியா அரபு பொருளாதாரத்தில் முதன்மையானதாகும். பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைப் பொறுத்தவரை, இது ஜி 20 குழுவிற்கு அடுத்தபடியாக உள்ளது. உலகின் 10 சக்திவாய்ந்ததும் செல்வாக்குமிக்கதுமான பொருளாதார நாடுகளில் சவுதி உலகில் 9 வது இடத்தில் உள்ளது.

மேலும் ஆயுத மற்றும் படைப்பலத்தை முன்னிலைப்படுத்தும் நோக்கில் மத்திய கிழக்கில் ஆளில்லா விமானங்களை உற்பத்தி செய்யும் திறன்மிக்க நாடாகவும் சவுதி மாறியுள்ளது. வருடமொன்றுக்கு 120 ஆளில்லா விமானங்களை சவுதி உற்பத்தி செய்கிறது.

சுற்றுலாத் துறையிலும் பாரிய முன்னேற்றமடைந்துள்ள சவுதிக்கு முழு உலக மக்களும் படையெடுக்கும் அளவுக்கு சுற்றுலாத்துறை வலுவடைந்துள்ளது. அத்தோடு சவுதி அரேபியா ஜி20 நாடுகள் அமைப்பிலும் பிரிக்ஸ் நாடுகள் அமைப்பிலும் மிக முக்கிய பங்களிப்பைச் செய்கிறது.

அல்லாஹ்வின் அருளாலும் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் அயராத முயற்சிகளாலும் திறம்மிக்க சவுதி மக்களின் சக்தியாலும் உலகின் கவனத்தை சவுதி தன் பக்கம் ஈர்த்துக் கொண்டுள்ளது. இத்தகைய மகத்தான வெற்றிகளையும் மறுமலர்ச்சிகளையும் முன்னேற்றத்தையும் சவுதி அரேபியாவால் தொடர்ந்தும் அடைய முடிகிறது.



அதேநேரம் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான், தேசிய சர்வதேச அனைத்து விஷயங்களில் முன்னிலையில் இருப்பதோடு, நம்பிக்கைக்குரியவராகவும் அரபு இஸ்லாமிய தேசத்தின் நாயகனாகவும் சர்வதேசம் மதிக்கும் மிகப் பெரிய தலைவரகளில் ஒருவராகவும் விளங்குகிறார்.



இவ்வாறு அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைந்த நாடாக விளங்கும் சவுதி, இலங்கையின் மிக நட்புக்குரிய தேசமாகவும் உள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர நட்புறவு ஆரம்பமாகி 50 ஆண்டுகள் இவ்வருடம் நிறைவடைகிறது.

அந்த வகையில் சவுதி அரேபியா, இலங்கைக்கு அன்று தொட்டு இன்று வரை பல பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களுக்கும் சமூக, பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கும் உதவி ஒத்துழைப்புக்களை நல்கி வருகிறது. அவற்றில் கிண்ணியா பாலம், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிநவீன நரம்பியல் சிகிச்சை பிரிவு, பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களும் கண்பார்வை குறைபாட்டு பிரச்சினைக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவ முகாம்கள், வருடாவருடம் தொன் கணக்கில் பேரீச்சம் பழம் இலவசமாக வழங்கப்படல் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

ஆகவே சவுதியின் ஸ்தாபக நாளான பெப்ரவரி 22 ஆம் திகதியை சவுதி மக்களும் பொதுவாக அரேபியர்களும் உலக மக்களும் போற்றுகின்ற இத்தருணத்தில் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி உட்பட சவுதி அரேபிய மக்கள் அனைவருக்கும் இலங்கை அல் ஹிக்மா நிறுவனமும் அதன் பணிப்பாளர் சபையும் இலங்கை மக்கள் சார்பாக பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.





# கொடுத்த வாக்கை நிறைவேற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம்

**(எஸ்.எம்.எம். முர்ஷித்)**

பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நளீம் தனது முதல் மாத சம்பளத்தை பொது தேவைகளுக்காக பயன்படுத்துமாறு கல்குடா உலமா சபையிடம் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைத்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நளீம் 2018ல் தனது உள்ளூராட்சி மன்ற அரசியல் பிரவேசத்தின் போது மக்களிடம் ஒரு உறுதி மொழியினை வழங்கினார். தான் மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டால் அந்த பதவியால் கிடைக்கும் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வாகன சலுகை எதையும் தனக்கு என உபயோகிக்காது அவற்றை முழுமையாக மக்களின் தேவைக்காக வழங்கி விடுவேன் என்று கூறியதற் கமைவாக ஏறாவூர் நகர சபை உறுப்பினராகி பின்னர் தவிசாளர் ஆகவும் பதவி வகித்தார் ஆனால் அவர் அப்பதவிக்கான கொடுப்பனவு எதுவும் தனக்காக எடுக்காமல் தேவை உடைய மக்களுக்கும் நோயாளிகளுக்கும் என்று வழங்கியதோடு பாடசாலை, பள்ளிவாசல் என பொது தேவைகளுக்கு வழங்கி வந்தார்.

அந்த வகையில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்டு உள்ள அவர் தனது முதலாவது மாத சம்பளம் 54,285 ஷரூபாய், தொலைபேசி கட்டணம் 50,000 ரூபாய், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான எரிபொருள் கட்டணம்120,000 என மொத்த கொடுப்பனவாக இரண்டு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ஷரூபாய் (225,000) பணத்தினை இன்று கல்குடா உலமா சபையிடம் வழங்கி வைத்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்குடா தொகுதி ஆதரவாளர்களை நன்றியுடன் கௌரவிக்கும் முகமாக அகில இலங்கை ஜமியதுல் உலமா சபையின் கல்குடா கிளை நிருவாகத்திடம் அப்பகுதி பொது தேவைகளுக்கு பயன்படுத்தும் நோக்கில் இப் பணத்தினை கையளித்தார்.




உலமா சபை கல்குடா கிளை அலுவலகத்தில் வைத்து உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். தாஹிர் தலைமையிலான குழுவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நளீம் குறித்த நிதியை கையளிப்பு செய்தார் .

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்குடா தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி ஹபீப் றிபான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.ஜி.அஸீஸூல் றஹீம், அஷ்ஷெய்க் எம்.ஐ. ஹாமித் லெப்பை, எம்.ரீ.எம். அன்வர் உட்பட கட்சியின் கல்குடா தொகுதி ஏறாவூர் பிரதேச முக்கியஸ்தர்கள், உலமா சபையின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பேருவளை பள்ளிவாசல்களில் ரமழான் ஏற்பாடுகள்

**( பீ.எம்.முக்தார்)**

புனித ரமழானை முன்னிட்டு பேருவளை பகுதியில் உள்ள பள்ளிவாசல்கள், சாவ்லியாக்கள் மற்றும் அரபுக் கல்லூரிகளில் தற்போது ரமழான் ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் சீனன்கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசலில் புனித ரமழான் மாதம் முழுவதும் தராவீஹ் தொழுகைக்கு பின் ஹழரா (திக்ர்) மஜ்லிஸ் இடம்பெறும்.

மேலும் பல பள்ளிவாசல்கள் வெள்ளிக்கிழமை இரவும் திங்கட்கிழமை இரவும் திக்ரு மஜ்லிஸ்,ஹத்தாத் ராத்தீப் மஜ்லிஸ் மற்றும் சலவாத் மஜ்லிஸ் என்பன இடம் பெறவுள்ளன.

ரமழான் 17ல் புனித பத்ர் சஹாபாக்கள் தினம் அனுஷ்டிக்கப்படும்.

ரமழான் 27ம் தினத்தில் புனித லைலத்துல் கதிர் இரவினை முன்னிட்டு பல்வேறு சமய நிகழ்ச்சிகள் இரவு முதல் அதிகாலை வரை இடம்பெறும். தராவீஹ் தொழுவதற்கு பெண்களுக்கும் பள்ளிவாசல்களில் பிரத்தியேக வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

# பதுளை எல்வட்டன் தமிழ் வித்தியாலயத்தில் நான்கு மாணவர்கள் மீண்டும் சாதனை!

**(அப்துல் வாஹிட் ஏ. குத்தூஸ்)**

பதுளை எல்வட்டன் தமிழ் வித்தியாலயத்தில் நடந்து முடிந்த ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் பெறு பேறுகளின்படி இம்முறை பரீட்சைக்கு தோற்றி யிருந்த 16 மாணவர்களுள் பீ .கிசோபன் (167), எஸ் ஜஸ்வின்யா (156), பீ பிரகன்யா (146), எம். யுபீனா (141) ஆகிய நால்வர் சித்தியடைந்துள்ளதாக அதிபர் ஏ.ஜே. எம் அஷாட் தெரிவித்தார். ஜே. ஓவினாஸ் (138), ரீ. தஸ்மிகா (137) எஸ் . கியாஸ் (137) ஆகிய மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு அண்மித்துள்ளதாகவும் ஏனைய அனைத்து மாணவர்களும் 100 வீத பெறுபேற்றைப் பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார் .



கடந்த வருடமும் புலமை பரிசில் பரீட்சையில் வலய மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய தமிழ் தினப் போட்டியான ஆக்கமும் எழுத்தும் எனும் போட்டியில் நான்காம் இடத்தையும், இவ் வருடம் பேச்சுப் போட்டியின் மூன்றாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது .

93 வருட பாடசாலை வரலாற்றில் மீண்டும் தொடர் சாதனையை நிலைநாட்டி பாடசாலைக்கு புகழீட்டிக் கொடுத்த அனைத்து மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் கல்விச் சமூகம் சார்பில் அதிபர் அஷ ாட் ஜப்பார் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

# கற்பிட்டி தில்லையூர் பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்



**(எம்.எச்.எம்.சியாஜ்)**

கற்பிட்டி தில்லையூர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெற்ற பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் வெள்ளிக்கிழமை (14) பாடசாலையின் அதிபர் எஸ். எம்.அருஸ் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாகவும் அதற்கான ஏற்பாடுகள் மற்றும் பழைய மாணவர்களின் பங்களிப்பு என்பன தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப் பட்டதுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

அதன்படி தலைவராக பாடசாலையின் அதிபர் எஸ் எம் அருஸ் ( சுற்று நிருபத்தின்படி பதவி வழியாக) செயலாளராக மௌலவி எம்.டீ றிப்கான் ( றஹ்மானீ) பொருளாளராக எம்.சீ.எம் அஸ்வர் உறுப்பினர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மதுரங்குளி மீடியாவின் பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

**( எம் எச் எம் சியாஜ்)**

மதுரங்குளி மீடியாவின் ஏற்பாட்டில் கடந்த ரமழான் மாதத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய வினா விடை போட்டி நிகழ்ச்சியின் பரிசளிப்பும் விழாவும் , புலமையாளர்கள் மற்றும் ஆளுமைகள் கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஓய்வு பெற்ற நல்லா ந்தழுவை ஆரம்ப பாடசாலையின் முன்னாள் அதிபர் என்.எம்.எம். நஜீப் தலைமையில் மதுரங்குளி ட்ரீம் செடண்ரில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம் பைசர் மரைக்காரின் அழைப்பின் பேரில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

இவ்விழாவில் கடந்த ரமழான் மாதத்தில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சியில் பங்கு பற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களில் அன்றைய தினம் குளுக்கள் முறையில் அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது மேலும் 2023, 2024 ஆண்டுகளில் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் முகமாக பதக்கம் அணிவித்து, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் இன்னும் விஷேட கௌரவிப்பாக ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர்களான என்.எம்.எம். நஜீப், எம்.எச்.எம். றாசிக், ஏ. சீ. நஜிமுதீன் ஆகியோருடன் புத்தளம் சிரேஷ்ட ஊடகவியலாளரும், சமூகசேவையாளருமான எம்.யூ.எம். சனூன் ஆகியோர் கௌரவிக்கப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# "மெட்டுப் போடு" நூல் வெளியீட்டு விழாவில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

**(கே எ ஹமீட் )**

"மெட்டுப் போடு" நூல் வெளியீட்டு விழாவில் அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை "தமிழ் பேசும் சமூகங்களின் ஜனநாயக போராட்ட ங்களுக்கு மூத்த எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் பாரிய பங்களிப்பு வழங்கி வந்தனர்" என கருத்து தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் தலைமையில் பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் "மெட்டுப் போடு" நூல் வெளியீட்டு விழா பாலமுனை அமீர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், நமது பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கிய காலகட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் மூத்த எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் பாரிய பங்களிப்பு வழங்கி வந்தனர்.

நாம் எப்போதும் எமது சமூகத்திற்காக அர்ப்பணிப்போடு பங்களிப்பு வழங்கிய மூத்த எழுத்தாளர்களையும், பத்திரிகையாளர்களையும் கௌரவிக்க வேண்டும். குறிப்பாக பேராசிரியர்களான அனஸ், றமீஸ், அப்துல்லாஹ் ஆகியோர்களின் பங்களிப்பு குறித்து நமது சமூகம் ஆறுதல் அடைகின்ற நிலமை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை மன்றக் கல்லூ ரியில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றவூப் ஹக்கீம் (பா.உ) அவர்களினால் உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் தொடர்பாக வெளியிடப் பட்ட புத்தக வெளியீட்டு விழாவில் பேராசிரியர் அனஸ் அவர்கள் கடந்த காலங்களில் நமது முஸ்லிம் சமூகம் இனவாதிகளினால் பாதிக்கப்பட்ட வரலாற்றினை நினைவுபடுத்தியதுடன், முஸ்லிம் சமூகம் தொடர்பாக பாராளுமன்றத்தில் முஸ்லிம் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட 22 பேரும் பேச வேண்டும், நமது முஸ்லிம் சமூகம் தொடர்பான பதிவுகளை இட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்



நமது முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை நாம் எல்லோரும் ஒன்றி ணைந்து உருவாக்க வேண்டிய காலத்தில் நாம் உள்ளோம்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயாக்க எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் இலங்கையில் வாழும் எல்லா இன மக்களும் ஒன்றிணைந்து மகிழ்ச்சியாக கொண்டாட நாள் ஒன்றை அறிவிக்க வுள்ளதாக தெரிவித்துள்ளார். பௌத்த மக்கள், இந்து மக்கள், கிறிஸ்தவ மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து கொண்டாடும் நாள் அறிவிக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பான எந்த விடயங்களும் இதுவரை வெளிப்படையாக தெரிவிக்கப்படாத நிலமை உள்ளது எனத் தெரிவித்தார்.



# வருடாந்த புனித புர்தா தமாம் மஜ்லிஸ்

**பேருவளை பீ.ம்.முக்தார்**

பேருவளை சீனன் கோட்டை பாஸியா ஜும்ஆ மஸ்ஜிதில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமை காலையில் நடைபெற்றுவரும் புனித புர்தா மஜ்லிஸின் தமாம் நிகழ்வு 23.02.2025 ஞாயிற்றுக் கிழமை அஸர் தொழுகையைத் தொடர்ந்து சீனன் கோட்டை பாஸியா ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெறும்.

அஸர் தொழுகையைத் தொடர்ந்து புனித புர்தா மஜ்லிஸும்.

மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து வழீபா யாகூத்தியா ஹழரா மஜ்லிஸும்.

இஷாத் தொழுகையைத் தொடர்ந்து ரயீஸுல் முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி அல்'ஹாஜ் எம். என்.எம் இக்ராம் (அல் பாஸி) அவர்களினால் முஸாக்கராவும் நடாத்தப்படும்.

அனைவரும் கலந்து கொண்டு மேன்மையான பரக்கத்தை பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்டாலர்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

சீனன்கோட்டை பள்ளிச்சங்க அனுமதிப்படி புர்தா கமிடி இந்த நகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

### புர்தாவின் சிறப்பு

வான்மறை குர்ஆன் கூறும் வரலாற்றுச் சிறப்புமிக்க எகிப்து நாட்டில் 'அல்பூஸிர்' எனும் நல்லூரில் வாழ்ந்த பெரியார் ஸயீது இப்னு ஹம்மாது என்பவரின் அருமை திருமகனாய் கி.பி. 1211 ஆவது ஆண்டில், ஹிஜ்ரி 608ஆவது ஆண்டில் பிறந்தவர்தான் கஸீதத்துல் புர்தா இயற்றிய கவிஞர் ஷறபுத்தீன் முஹம்மது அல்பூஸிரி ஆவார். இவர் பிறந்த ஊர், 'அல்பூஸிர்' என்பதால்,இவரின் பெயருடன் இணைத்து 'அல்பூஸிரி' என்றே இவர் அழைக்கப்பட்டார். இவர் எகிப்திலுள்ள புகழ்மிக்க கல்விக் கருவூலமாம் 'அல்அஸ்ஹர்' பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுத் தேறினார். அரபி இலக்கண இலக்கியத்திலும் புலமை பெற்றார். கவிதை எழுதும் ஆற்றல் கைவரப் பெற்றார். இவரின் ஆற்றலை மக்கள் வியந்து பாராட்டிய சூழலில் இவருக்கு ஏற்பட்ட சோதனையாக கண்ணேறால் இவர் பாதிக்கப்பட்டு பக்கவாத நோய்க்கு ஆளானார். அரசுப் பணியிலிருந்த இவர் இந்த நோயினால் ஆறாத துயரடை ந்தார். மருத்துவ சிகிச்சைகள் பயனளிக்கவில்லை. உடலின் சரிபாதி இயக்கமற்றிருந்தது. படுக்கையிலிருந்து எழுந்தமரவும் இயலாமல் அவதிப்பட்டார். இந்தச் சூழலில் கலங்கியோர்க்குக் கைகொடுக்கும் கருணை நபிகளாரை கருத்தில் பதித்து அவர்களின் ஆசியினை யாசித்து அகமுருகிப் பாடிய அரிய காவியம் தான் 'கஸீதத்துல் புர்தா 'ஆகும்.

நோய்வாய்ப் படுக்கையில் இந்தப் பாமாலையின் 163 கண்ணி களையும் பாடி முடித்தபின் கவிஞர் பூஸிரி கண்ணயர்ந்தார். கனவிலே கருணை வடிவான காத்தமுந்நபி (ஸல்) அவர்கள் காட்சி நல்கி கலங்கிய கவிஞரைப் பார்த்து, அக்கவிதையை பாடிக்காட்டப் பணித்தார்கள். பூமான் நபிகளைக் கண்டு பூரிப்படைந்த கவிஞர் பூஸிரி பொங்கி வந்த பிரவாகமாய் தாம் பாடிய கவிதையைப் பெருமானார் முன்னில் பாடிக் காட்டினார்கள். கவிஞர் கவிதைப் பாட கருணை நபிகளார் அதை சுவைத்து மகிழ்ந்து தம் பொன்னாடையைக் கவிஞருக்குப் போர்த்தினார்கள். அத்துடன் தன் தங்கக் கரங்களை கவிஞர் மேனியில் தடவினார்கள். கவிஞரோ புதுப்பொலிவோடு புத்துணர்வு பெற்று எழுந்தார். அன்று காலை அவர் நலம் பெற்று சுபுஹூத் தொழுகைக்காக பள்ளிக்குச் சென்றபோது வழியில் அவர்களை சந்தித்த பெரியவர் கவிஞரிடம், 'பெருமானாரிடம் நீர் ஓதிக் காட்டிய கவிதையை நான் படித்து மனனமிட எனக்குத் தாருங்கள்' எனக் கேட்டார். அதற்குக் கவிஞர் அவரை நோக்கி, 'நான் நபிகளாரைப் புகழ்ந்து பல கவிதைகள் பாடியுள்ளேன். இவற்றில் எதைக் கேட்கிறீர்' என்றார். அதற்கு அவர், 'அமின் ததக்குரி ' எனத் தொடங்கும் கவிதை என்ற போது - வியந்துபோன கவிஞர் பூஸிரி அந்தப் பெரியவரை நோக்கி, 'அந்தக் கவிதை குறித்து உங்களுக்கு எப்படித் தெரியும். அதை நான் எவரிடமும் வெளியி டவில்லையே என்றார். அதற்கு அப்பெரியவர், நீர் அந்தக் கவிதையை நபிகளாரிடம் கனவில் படித்துக் காட்டிய போது நானும் பக்கத்தில் இருந்தேன் என்றார். பின்னர், அக்கவிதையை பெரியவரிடம் கவிஞர் ஒப்படைத்தார்.இதனால் கவிஞர் கருணை நபிகளாரிடம் இந்தக் கவிதையை ஓதிக் காட்டிய செய்தி மக்களிடையே பரவியது.

அன்றைய எகிப்து மன்னர் தாஹிர் என்பவரின் அமைச்சர் பஹாவுத்தீன் என்பவர் கவிஞரிட மிருந்து இக்கவிதையை வாங்கிப், பிரதி எடுத்து பெரும் பேணு தலாக ஓதி வந்தார். இந்நிலையில் ஒருநாள் மன்னர் தாஹிருக்கு கண்வலி ஏற்பட்டு கண்பார்வை இழக்கும் நிலை நெருங்கியது. அப்போது ஒரு பெரியவர் மன்னரின் கனவில் தோன்றி உமது அமைச்சரிடம் புர்தா எனும் ஒரு கவிதை இருக்கிறது. அதை வாங்கி உமது இரு கண்களிலும் ஒத்திக் கொள்ளு ங்கள் என்றார். இந்தக் கனவை அரசர் தன் அமைச்சரிடம் கூறினார். அப்போது அமைச்சர் அரசரை நோக்கி என்னிடம் நபிகளாரின் புகழ்பாடும் ஒரு கவிதையைத் தவிர வேறு எதுவும் இல்லை. எல்லாப் பிணிகளையும் அகற்றிட இந்தக் கவிதையை நாங்கள் வஸீலா ஆக்குகிறோம் எனக் கூறி புர்தாவை அவர் கையில் கொடுத்தார். அரசர் அதை வாங்கி தன் கண்களில் ஒத்திக் கொண்டு அதை ஓதிக் காட்ட உத்தரவிட்டார். உடனே புர்தா ஓதப்பட்டது.அக்கணமே அரசரின் கண்வலி பூரண குணம் பெற்றது. இந்தக் காரணத்தினால் இந்தக் கவிதைக்கு புர்தா என்றே பெயர் வைக்கப்பட்டது.

'புர்தா' என்ற சொல்லுக்கு 'போர்வை' என்று பொருள் 'புர்உத்தாஃ என்ற சொல்லுக்கு நோய் நிவாரணி என்று பொருள். இவ்விரு பெயர்களும் இந்நூ லுக்கு பொருத்தமே. பூமான் நபிகளார் போர்த்தியதால் இது போர்வையாகவும், கவிஞர் பூஸிரியார்க்கும், மன்னர் தாஹிருக்கும் பிணியகற்றியதால் இது நோய் நிவாரணியாகவும் துலங்குகிறது.

'இஸ்பஹான்' நகரில் வாழ்ந்த 'ஹாஷரூன் அல் அர்கம்' என்ற பெரியார், அண்ணல் நபிகளாரை கனவில் கண்டு தன் நிலைமை யையும், வறுமையையும் முறையிட்டார். அதற்கு நபியவர்கள் என் மீது முஹம்மத் இப்னு ஸயீத் அல்பூஸிரி என்பவர் இயற்றிய கவிதையை வாங்கி வழக்கமாக தினமும் ஓதி வாருங்கள் என்றார்கள்.

இதற்கிணங்க ஹாரூன் அல் அர்கம் இதை ஓதிவர - அவரின் சிக்கல்கள் நீங்கின, பிணிகள் அகன்றன,நாட்டங்கள் நிறைவேறின, அபிவிருத்திகள் மிகுந்தன, ஆனந்தம் பெருகின.

### உன்னத புர்தா ஓதும் ஒழுங்கு முறைகள்

1. புனித புர்தாவை, ஒலுவுடன் ஓதவேண்டும்.

2. ஓதுகிற சபையை பூக்கள், ஊதுபத்தி, சாம்பிராணி, அத்தர், சந்தனம் போன்ற நறுமணம் கமழும் பொருட்களால் மணம் பரப்பச் செய்ய வேண்டும்.

3. இரண்டு ரக்அத் 'இஸ்திகாறா' தொழுத பின் -புர்தா ஓதத் தொடங்க வேண்டும்.

4. கிப்லாவை முன்னோக்கி அமர்ந்து ஓத வேண்டும்.

5. அத்தஹிய்யாத்து' அமைப்பில் அமர்ந்து ஓதவேண்டும்.

6.பத்து முறையோ, ஏழு முறையோ பெருமானார் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸ ல்லம்) அவர்கள் மீது ஸலவாத் ஓதி, புர்தா ஓதத் தொடங்க வேண்டும்.

7. லகத் ஜாஅகும் றசூலுன்' எனத் தொடங்கும் திருவசனத்துடன் சூறத்துல் ஃபாத்திஹா மற்றும் குல் ஹூவல்லாஹூ அஹத், குல்அவூது பிரப்பில் ஃபலக், குல்அவூது பிரப்பின்னாஸ் ஆகிய அத்தியாயங்களை ஓதிய பின் புர்தா ஓத வேண்டும்.

8. உடல் தூய்மையைப் போல் உள்ளமும் களங்கமற்ற தூய எண்ணத்தைப் பெற்றவண்ணம் ஓத வேண்டும்.

9. இரண்டு 'மீம்' களில் முடியும் பைத்தை ஓதிய பின் 'மவ்லாய ஸல்லி வஸல்லிம் பைத்தை ஓத வேண்டும்.

10. ஓதவதற்கு மத்தியில் தேவையின்றி பேசவோ சிரிக்கவோ கூடாது.

# புதிய விமானப் படைத் தளபதி தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு விஜயம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

விமானப் படையின் 20 வது தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள எயார் மார்சல் வந்து எதிரிசிங்க கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். பள்ளிவாசல் தலைவர் ரியாஸ் சாலி உள்ளிட்ட நிர்வாகத்தினர் அவரை வரவேற்றனர். அங்குள்ள சியாரத்தை தரிசித்ததுடன் விசேட துஆ பிரார்த்தனையிலும் கலந்து கொண்டார்.

அங்கு விருந்தினர்களுக்காக வைக்கப்பட்டுள்ள கையேட்டிலும் தனது வரவை பதிவு செய்து கையெழுத்திட்டார்.

தெவட்டகஹ பள்ளி நிர்வாகத்தினால் புதிய விமானப்படை தளபதிக்கு ஞாபகார்த்தமாக புனித குர்ஆன் பிரதி ஒன்றையும் கைளிக்கப்பட்டதுடன் புதிய தளபதியினால் நிர்வாகத்தினருக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டது.

# அனுராதபுர மாவட்டத்தில் அஹதிய்யா சான்றிதழ் பரீட்சை

(எம்.ரீ. ஆரிப் )

அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தினால் நடாத்தப்படும் அஹதிய்யா தேசிய சான்றிதழ் பரீட்சை 2025 இவ்வாண்டு அனுராதபுரம் மாவட்டத்தில் மூன்று மத்திய நிலையங்களில் எதிர்வரும் (22 ஆம் திகதி) சனிக்கிழமை இடம்பெறவுள்ளதாக அஹதிய்யா பாடசாலைகளின் அனுராதபுரம் மாவட்ட செயலாளர் தேசமான்ய எம்.ஆர்.எம்.ரனீஸ் தெரிவித்தார்.

இதனடிப்படையில் அந்நூர் அஹதிய்யா பாடசாலை அனுராதபுரம், தாருல் ஹிக்மா அஹதிய்யா நாச்சியாதீவு, அல் ஹூதா அஹதிய்யா தல்கஹவெவ, அல் மத்ரசத்துல் ஹூதா மதவாச்சி, அந் நஜாஹ அஹதிய்யா பாடசாலை கோவில்பந்தாவ ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு அனுராதபுரம் சாஹிரா கல்லூரியில் பரீட்சைகள் நடைபெறும்.

தாருல் இஸ்லாஹ் அஹதிய்யா பாடசாலை கஹட்டகஸ்திகிலிய மற்றும் கருவலகஸ்வெவ அந்நூர் அஹதிய்யா பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு கஹட்டகஸ்திகிலிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பரீட்சைகள் நடைபெறும்.

மடாடுகம அல் அரபா அஹதிய்யா இஹலபுளியன்குளம் அந் நஹ்லா அஹதிய்யா மற்றும் அல் அமீன் அஹதிய்யா மரதன்கடவல ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு மரதன்கடவல அல் அமீன் முஸ்லிம் வித்தியாலயத்திலும் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக செயலாளர் தெரிவித்தார்.

மேற்படி அஹதிய்யா பாடசாலை மாணவர்கள் குறித்த பாடசாலைகளுக்கு பரீட்சைக்கு செல்லுமாறு அனுராதபுரம் மாவட்ட அஹதிய்யா செயலாளர் எம்.ஆர்.எம்.ரனீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கிளீன் சிறீலங்கா திட்டத்தின் கீழ் பேருவளை கடற்கரை சுத்தப்படுத்தும் பணி

(பீ.எம்.முக்தார்)







கிளீன் ஸ்ரீ லங்கா வேலை திட்டத்தின் கீழ் பேருவளை கடற்கரை பகுதியை சுத்தப்படுத்தும் பணி சிறப்பாக முன்னெடுக்கப் பட்டது. இந்த வேலை திட்டத்தின் முதல் கட்ட நடவடிக்கையாக பேருவளை நகர எல்லைக்குட்பட்ட பல பகுதிகளில் குப்பை கூளங்கள் சுத்திகரிக்கும் நடவடிக்கை ஆரம்பமானதுடன் அரசு அதிகாரிகள், பொலிசார், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என பெரும்பாலானோர் பங்கு பெற்றனர்.

எழில் மிகு கடற்கரைப் பிரதேசம் கவர்ச்சிகரமான சுற்றுப் பயணம் என்ற தொனிப் பொருளில் இந்த சுத்திகரிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பேருவளை அபிவிருத்தி குழு தலைவருமான சந்திம ஹெட்டியாராய்ச்சி, பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினர் அஷ்ரூஸ் அஸாத், பேருவளை பிரதேச செயலாளர் ரன்சன் பெரேரா, களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காவிந்த பியசேகர, வேருவலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்ம குமார, நகர சபை மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

# மாத்தளை மாவட்டத்துக்கு நிரந்தர காதி நீதவான் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை

(அப்துல் வாஹித்)

மாவட்டத்துக்கான காதி நீதவானாகக் கடமை புரிந்துவந்த எம்.ஜெய்னுதீன் பதவி விலகலையடுத்து ஏற்பட்ட மாத்தளைவெற்றிடத்துக்கு மாத்தளை மாவட்டத்துக்கான நிரந்தர காதி நீதவான் ஒருவர் நியமிக்கும்வரை எம். நியாஸ் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தார். உடுநுவர - கெலிஓய பிரதேச காதிநீதவானாக சுமார் 12 வருடங்கள் பணிபுரிந்துள்ள இவர் மாத்தளை மாவட்டத்துக்கான காதிநீதவானாகவும் நியமனம் பெற்று சுமார் ஐந்து மாதங்களே பணிபுரிந்த நிலையில் தனது தனிப்பட்ட நிலைமையைக் கருத்திற் கொண்டு தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாக நீதிச்சேவை ஆணை குழுவுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளதாக மாத்தளை மாவட்ட மஸ்ஜிதுகள் சம்மேளனத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். முஹத்தார் ஜேபி தெரிவித்தார்.

இதனையடுத்து மீண்டும் வெற்றிடமான மாத்தளை மாவட்டத்துக்கான காதிநீதவானாக தும்பன-- கலகெதரமடிகே பிரதேச காதிநீதவானான எம்.பீ. நளீம் சியாம் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மாத்தளை மாவட்டத்துக்கான நிரந்தரமான காதிநீதவான் ஒருவர் இல்லாத நிலையில் முஸ்லிம்கள் தமது விவாக விவகாரத்து வழக்குகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதால் நீதிச்சேவை ஆணைக்குழு மாத்தளை மாவட்டத்துக்கான தகுதியான ஒருவரை உடன் நியமிக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென பலரும் எதிர்பார்க்கின்றனர்.

# அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் அங்குரார்ப்பணம்



(அஷ்ரப் ஏ சமத்)

அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் எனும் ஊடகவியலாளர்கள் சங்கம் அண்மையில் (16) வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் அமைப்பு இலங்கையில் உள்ள தமிழ் பத்திரிகைகள், தொலைக்காட்சி மற்றும் வானொலி சமூக சேவை வலையமைப்பின் 125 க்கும் மேற்பட்ட தமிழ் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

தலைவராக தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், பொதுச் செயலாளராக தமிழ் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவராசா, பொருளாளராக இசாக் வருனி மற்றும் 14 செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டது.

100க்கும் மேற்பட்ட இளம் ஊடகவியலாளர் ஊடக நிறுவனங்களில் எதிர்நோக்கும் சட்டப் பிரச்சினைகள், தொழில் நிரந்தரம் , சம்பளம், பதவி உயர்வு போன்ற பல்வேறு பிரச்சனைகளை முன் வைத்தனர்

அத்துடன் செயலாளர் சிவராசா அங்கு கருத்து தெரிவிக்கையில் இவ் அமைப்பில் இணைந்துள்ள சகல ஊடகவியலாளருக்கும் காப்புறுதித் திட்டம் வழங்கி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அமைப்பின் தலைவர் செந்தில் வேலவர் இங்கு கருத்து தெரிவிக்கையில்...

பிராந்திய ஊடகவியலாளர் ஒர் பத்திரிகையின் அல்லது இலக்ரோனிக் ஊடகங்களின் முதுகெழும்பாக உள்ளனர். அவர்கள் பொருளாதாரப் பிரச்சனைகள், நோய்வாய்ப்பட்டல் போன்ற பிரச்சனைகளினால் ஊடகவியலாளர்களுக்கு உதவுவதற்கு ஒர் அமைப்பில்லாமல் பலர் கஷ்டங்களை எழுதுகின்றனர். அவர்களுக்கு நாம் உதவ வேண்டும். வெளிநாட்டு தூதரகங்களை நாடி, நாம் உதவித் திட்டங்களை பெற்றுக் கொடுத்தல், ஊடக அமைச்சரை சந்தித்தல், கிரிக்கெட் குழு, மகளிர் குழு என பல பிரிவுகளை ஏற்படுத்தி நாம் பாதிக்கப்படும் ஊடகவியலாளர்களுக்கு



இவ் அமைப்பின் உதவிகளைப் பெற்றுக் கொடுத்து உதவுவதற்காக நாம் பாடுபட வேண்டும்.

மகளிர் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க மகளிர் இணைப்பாளர் ஒருவரை நியமித்தல், அண்மையில் ஒருவன் எனும் பத்திரிகையில் கடமையாற்றி தொழில்களை இழந்த 35 ஊடகவியலாளர்களின் பிரச்சனைகள், பல்வேறு தொழில் பாதுகாப்பு, தமது சட்டப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு விடயங்களை இச் சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர்கள் முன்வைத்தனர்.

மேலும் முன்னாள் ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் காலம்சென்ற பாரதியின் உருவப்படத்துக்கு நினைவு அஞ்சலி செலுத்தியமையும் குறிப்பிடத்தக்கது

# சந்திம ஹெட்டியாராச்சி தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்திற்கு விஜயம்



(பீ.எம் முக்தார்)

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பேருவளை அபிவிருத்திக் கமிட்டி தலைவருமான சந்திம ஹெட்டியாராச்சி தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்திற்கு விஜயம் செய்தார்.

நிலையத்தின் தலைவர் கலாநிதி. நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம், பணிப்பாளர் டாக்டர் ஹூஸ்னா நஜீப் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினரை வரவேற்றனர்.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி, ஆன்மீகக் கல்வி மற்றும் சமய, சமூகப் பணிகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினருக்கு இதன் போது விளக்கமளித்தார்.

இந்த கல்வி நிலையத்தின் பல்ல பணிகளை அவர் பாராட்டினார். விஷேடமாக ஜனாஸாக்களை கொண்டு செல்ல இலவச அம்பியூலன்ஸ் சேவை குறித்தும் அவர் பெரிதும் பாராட்டியதோடு, அரசின் மூலம் வழங்க முடியுமான அனைத்தையும் பெற்றுத் தருவதாக அவர் குறிப்பிட்டார்.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் இயங்கும் நூல் நிலையம், அமீர் ஆலிம் குர்ஆன் மத்ரஸாவையும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம ஹெட்டியாராச்சி பார்வையிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினரின் இந்த விஜயம் குறித்து கலாநிதி. நஜீப் ஹாஜியார் நன்றி கூறினார். பாராளுமன்ற உறுப்பினருடன் தேசிய மக்கள் சக்தி பேருவளை அமைப்பாளர் சன்ன தயாப்பிரிய மற்றும் தர்கா நகர் இணைப்பாளர்களான இராஸ் இஸ்மாயில், பஸ்மின் பைஸர் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

# வை.எம். எம். ஏ. ஐம்பது வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பரிசளிப்பு விழா



(பாராதாகிர்)

மாவனல்லை உயன்வத்தை வை.எம். எம். ஏ.ஆரம்பிக்கப்பட்டு, ஐம்பது வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பரிசளிப்பு விழா அதன் தலைவர் எம.எஸ்.எம். தாரிக் தலைமையில் உயன்வத்தை நூராணியா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.
வை.எம்.எம். ஏ இன் வருட பூர்த்தியை முன்னிட்டு இப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட கலைப் போட்டி நிகழ்ச்சிகளின் பரிசளிப்பு நிகழ்வும் இதன் போது நடைபெற்றது.
இந் நிகழ்ச்சிக்கு அகில இலங்கை வை. எம். எம் .ஏ பேரவையின் தேசிய தலைவர் சட்டத்தரணி அம்ஹர் ஷரீப் ,விசேட அதிதிகளாக லக்சிறி சேவா நிருவனத்தின் உரிமையாளர் எம்.எஸ்.எம். ருவைஸ்தீன்,சபுமல் நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.எம். கமால்தீன், அதிகளாக வை.எம்.எம். ஏ. முன்னாள் தலைவர் சஹீட் எம் ரிஸ்மி, கேகாலை, இரத்தினபுரி மாவட்ட வை.எம். எம் .ஏ பணிப்பாளர் எம். கே.எம். லுக்மான்,அரநாயக்க வை.டப்லியூ. எம். ஏ.தலைவி நிஸா ஆப்தீன் மற்றும் அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## ஓட்டமாவடி - காவத்துமுனையில் முதியோர்களுக்கான திரியபியச வீடு கையளிப்பு



(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

முதியோர்களுக்கான திரியபியச வீடமைப்பு திட்டத்தின் கீழ் ஏழு லட்சம் ரூபா நிதி அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக வழிகாட்டலின் கீழ் முதியோர்க ளுக்கான தேசிய செயலகத்தினால் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டது.
திரியபியச வீட்டிற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கு வீடு திருப்திகரமான முறையில் பூரணப்படுத்தப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை (18) பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.
பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜே.ஜே. முரளிதரன் கலந்து கொண்டதுடன் ஏனைய அதிதிகளாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் கௌரவ ஏ.தாஹிர், சமுர்த்தி மாவட்ட பணிப்பாளர் எஸ். ராஜ்பாபு, சமுர்த்தி மாவட்ட செயலக கணக்காளர் எம்.வினோத், உதவி பிரதேச செயலாளர் எம்.ஆர். சியாஉல் ஹக், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ. றியாஸ், சமுர்த்தி தலைமை முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.நஜீம், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம்.சுபைர், எம்.ஐ. நசூஹா, எம் பர்ஸானா ஆகியோர் என பலரும் கலந்து கொண்டனர்.

## அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



( பீ.எம். முக்தார்)

பேருவலை, சீனன்கோட்டையைச் சேர்ந்த இஸ்பஹான் ஸாபிர் அகில இலங்கைக்கான சமாதான நீதவானாக களுத்துரை மேலதிக மாவட்ட நீதிபதி சம்பத் கமகே முன்னிலையில் (19) சத்தியப் பிரமானம் செய்து கொண்டார்.
பேருவலை, சீனன்கோட்டை எகொடவத்தையைச் சேர்ந்த மர்ஹூம் முகத்தமுஷ்ஷாதுலி அல்ஹாஜ் ஸாபிர் ஜே.பி. மற்றும் மர்/ஹமா பாதிமா மபாஹிரா தம்பதிகளின் மூத்த புதல்வரான இவர்
பேருவலை, சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவரும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறைக்கான டிப்ளோமா பட்டதாரியுமாவார்.
அரசாங்க தகவல் திணைக்கத்தில் ஊடக ஆய்வு அதிகாரியாக கடமையாற்றும் இவர் சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் நிர்வாகச் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## Clean Sri Lanka வேலைத்திட்டம் ஆரம்பிப்பு





கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஜலால் வித்தியாலய த்தின் Clean Sri Lanka வேலைத் திட்டத்தின் முதலாம் வார நிகழ்வு கள் பாடசாலை அதிபர் டீ.கே.எம். சிராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இதன் போது கல்வி, கல்வி சாரா பணிக்குழு மற்றும் மாணவர்கள் அனைவரும் இவ் வேலைத்திட்டம் தொடர்பான சத்திய பிரமாணத்தை மேற்கொண்டிருந்தனர்.
இவ் வேலைத்திட்டம் தொடர்பாக மாணவர்களுக்கும் கல்வி மற்றும் கல்வி சாரா பணி குழுவினருக்கும் தெளிவு படுத்தும் நிகழ்வுகள் பிரதி அதிபர் எம்.ஏ.எம். சிராஜினால் மேற்கொள்ளப்பட்டதோடு பாடசாலை மட்ட Clean Sri Lanka வழிப்படுத்தல் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர்.
மேலும் சிரேஷ்ட மாணவர்கள் தலைமையில் பாடசாலை சுகாதார மேம்பாட்டுக்காக மாணவர்கள் சார்பாக செயற்குழு ஆரம்பிக்கப் பட்டு பொறுப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டது. செயல்களை முன்னெடுப்பொம் - பொறுப்புடன் செயற்படுவோம் தொனிபொருளி னாலான வீடியோ காட்சிகளும் Smart Board துணையுடன் காட்சிப் படுத்தப்பட்டது. நாளாந்த சுகாதார மற்றும் சுத்தப்படுத்தல் செயற்பாடு களை மேற்பார்வை செய்ய மேற்பார்வைக் குழு நியமிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கும் மாணவத் தலைவர்களுக்கும் பல்கலைக்கழகத்தில் தலைமைத்துவ பயிற்சி பட்டறை!



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகளும் மாணவத் தலைவர்களும் கலந்து கொண்ட தலைமைத்துவப் பயிற்சி பட்டறை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
இதில் வளவாளர்களாக தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம். ரிபாயுதீன், சமூகவியல் துறைப் பேராசிரியர் எஸ்.எம் அய்யூப் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான தலைமைத்துவ ஆளுமை விருத்தி தொடர்பாக விரிவுரையாற்றினர். இந்நிகழ்வில் பல்கலைக்கழக நூலக வசதிகள் தொடர்பாக சி.எம்.ஏ. முனாஸ் அவர்களினால் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.
மேலும் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை பணிப்பாளர் ஐ.எம்.கடாபி அவர்களினால் பல்கலைக் கழகத்தினுள் நடைமுறைப்படுத்தப் படும் விளையாட்டுத்துறை தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டது.

## ஏ.எம்.தாஜுவுக்கு "நட்பின் மாண்பு" விருது



(ஐ.ஏ.காதிர்கான்)

ஊடகத் துறையில் முப்பது வருடங்கள் பணியாற்றி, தற்போது ஓய்வு நிலை ஊடகராக கடமையாற்றவுள்ள ஏ.எம்.தாஜுவுக்கு "நட்பின் மாண்பு" விருது வழங்கப்பட்டது. ஆய்வோர் அரங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், அமைப்பின் தலைவரும் ஓய்வு நிலை ஊடகருமான உமர் லெப்பை யாகூப் மற்றும் டொக்டர் ரிஷி ஆகியோர் இணைந்து விருதை கையளித்தனர். ஆய்வோர் அரங்க அங்கத்தவர்களும் அருகில் காணப்படுகின்றனர்.






## சவூதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு இது கொண்டாடப்படுகிறது.

இந்த நாள் சவூதி அரேபியாவின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் வளர்ச்சிக்கான அதிநவீன தலைமைத்துவத்தை போற்றும் முக்கியமான நிகழ்வாகும்.

18ஆம் நூற்றாண்டில், அரேபிய தீபகற்பம் பல்வேறு குடிகள் மற்றும் மன்னர்களால் துண்டாடப்பட்ட நிலையில் இருந்தது. இதனை 1727ஆம் ஆண்டு, இமாம் முஹம்மத் பின் சஊத், திரியா பிரதேசத்தில் (Diriyah) முதல் சவூதி அரசை உருவாக்கி, நல்லாட்சி, நீதித்தன்மை மற்றும் பொருளாதார முன்னேற்றத்தின் அடிப்படையில் மக்கள் ஒருங்கிணைந்த ஒரு புதிய இராச்சியத்தை உருவாக்கினார்.

இதன் பின்னர் 1932 ஆம் ஆண்டு மன்னர் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் தலைமையில் ஒருங்கிணைந்த சவூதி அரேபிய இராச்சியத்தின் உருவாக்கத்திற்குத் தளம் அமைத்தது.

சவூதி தேசிய தினம் (செப்டம்பர் 23) ஒருங்கிணைந்த சவூதி அரசின் அறிவிப்பை கொண்டாடுகின்றது, அதேபோல் இந்த நிறுவனர் தினம் (பெப்ரவரி 22) சவூதி அரசின் ஆரம்ப வரலாற்றையும், பண்பாட்டுப் பெருமையையும் முன்னிறுத்துகிறது.

2022ஆம் ஆண்டு மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் இந்த நாளை அரச விடுமுறையாக அறிவித்தார்.

இந்த ஆண்டு சவூதி அரேபியாவில் உள்ளூர் மற்றும் தேசிய அளவிலான கொண்டாட்டங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்காட்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரியக் கதைப்பொழிவுகள் மற்றும் ரியாத், ஜித்தா உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாரம்பரிய அணிவகுப்புகள் மற்றும் வானவேடிக்கைகள் மற்றும் முன்னணி சவூதி குடிமக்களுக்கு சிறப்பு கௌரவித்தல் போன்ற அம்சங்கள் இடம்பெறவுள்ளன.

இந்த சிறப்பு நாளை கொண்டாடும் முகமாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகம் கொழும்பில் ஒரு விசேஷ விழாவை ஏற்பாடு செய்துள்ளது. இது இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் ஒரு நிகழ்வாகும்.

இலங்கை - சவூதி அரேபியாவின் 50 ஆண்டு நட்புறவு

இந்த ஆண்டு நிறுவனர் தினம்மிகவும் முக்கியமானதாக அமைகிறது, ஏனெனில் சவூதி அரேபியா □ இலங்கை இருநாட்டு ராஜதந்திர உறவுகள் 50வது ஆண்டை கடந்து வருகின்றன. 1974 இல் தொடங்கிய இந்த உறவு, வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பண்பாட்டு பரிமாற்றம்போன்ற பல்வேறு துறைகளில் வலுவாக வளர்ந்துள்ளது.



இந்த 50வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் ஒரு இலச்சினை (டிழபழ), 2025 பிப்ரவரி 5 அன்று ரியாத் நகரில் நடைபெற்ற விழாவில் இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வாத் மற்றும் சவூதி துணை அமைச்சர் அப்துல்மஜீத் அல்-ஷம்மாரி தலைமையில் வெளியிடப்பட்டது.

அந்நிகழ்வில், இலங்கையும் அரேபிய நாடுகளும் 7ஆம் நூற்றாண்டிலேயே தொடர்பு கொண்டிருந்ததாக, மூன்றாம் அக்போதி அரசர் மதீனா நகரில் இருந்த நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு தூதர் அனுப்பிய வரலாற்று சம்பவம் சுட்டிக்காட்டப்பட்டது.

## வாசிப்பீராக! 23



பிஸ்தாமி அஹமத்

# வாசிப்பு ஒரு முதலீடாக

வாசிப்பை வழக்கமாக பொழுதுபோக்காக மட்டும் பார்த்து கடந்து செல்ல முடியாது இன்றைய உலகம் நிலைத்திருப்பதற்கு வாசிப்புதான் காரணம் வாசிப்பவர்கள் உயிர் வாழ்வதற்கான புத்தகங்கள் வெளி வருகின்றன கருத்துக்கள் சிந்தனைகள் கோட்பாடுகள் பேச பொருள்கள் ஆகின்றன.

எழுத்தாக்கம் புத்தக வெளியீடு பதிப்பு மொழிபெயர்ப்பு நூலகம் நூல் வெளியீடு போன்றன இன்று வருமானம் ஈட்டித் தரக்கூடிய பெருந்துறைகளாக மாறி உள்ளன வருடா வருடம் நடைபெறக்கூடிய பிராந்திய தேசிய சர்வதேச புத்தக மாநாடுகள் கருத்தரங்குகள் புத்தகங்கள் வழியான பொருளாதார நலன்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதனை தவிர்க்கவும் மறுக்கவோ முடியாத நிலை உள்ளது.

வாசிப்பாற்றல் உள்ளவர்கள் எழுத்தாற்றலை பயன்படுத்தி புத்தகங்கள் சந்தி கைகள் மொழிபெயர்ப்புகள் வெளியீடுகள் என பலதுறை பட்ட படைப்பாக்கங்களை வெளியிட்டு வருமானம் ஈட்டக்கூடிய ஒரு நிலை காணப்படுகிறது.

சமகால உலகு பொருள் முதல் வாத உலகு. அனைத்தையும் பொருளாதார நோக்கில் அனுகுகிறது பார்க்கிறது.

வாசிப்பின் வழியாக அனைத்துமே நோக்கப்படுகிறது.

வாசிப்புத்துறை இன்று வருமானம் ஈட்டும் ஒரு துறையாக உள்ளது. வாசிப்பை வளமூட்டும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் செயலமர்வுகள் மாநாடுகள் கருத்தரங்குகள் நடைபெற்றுவருகின்றன

அவ்வாறே வாசிப்பு க்கான நூல்கள் சஞ்சிகைகள் பெருகியுள்ளன.

குறிப்பாக சிறுவர் இலக்கிய நூல்கள் மொழிபெயர்ப்புகள் படைப்புகள் வழியாக ஊக்குவிக்கப்படுகின்றன.

வாசிப்பு ஊக்குவிக்கப்படுதல் என்பது எழுத்தாக்கம் ஊக்குவிக்கப்படுவ தாகும்.

மூத்த எழுத்தாளர்களின் அனுபவங்களை பெற்றுக்கொண்டு அனுபவங்களை கையாண்டு வளர்ந்து வரும் எழுத்தாளர்களை வழிகாட்டக்கூடிய நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதன் வழியாக வாசிப்பை மேம்படுத்தலாம். ஊக்குவிப்பதற்கான போட்டி மிக்க களமாக அமைக்கலாம்.

வாசிப்பு வளரும் உலகில் வளம் சேர்க்கும் ஒரு தொழில்முறை. Content writers Digital creators.... போன்றவர்களுக்கும் வாசிப்பு மிகப் பிரதான முதலீடாக உள்ளது வசிக்கின்ற கருத்துக்களை மையப்படுத்தி பூத்த புதிய கருத்தாழமிக்க சிந்தனைகளை வித்தியாசமான வழிமுறைகளை பயன்படுத்தி வெளியிடுவதன் மூலம் வருமானம் ஏற்றி தரக்கூடிய ஒரு தொழில்துறையாக அது உள்ளது.

அந்த வகையில் வாசிப்பு சாதாரண ஒரு பொழுதுபோக்கு என்ற நிலையை தாண்டி அது வாழ்வாக வழிபாடாக வணக்கமாக நிலை மாற்றம் அடைந்து இப்பொழுது வருமானம் ஈட்டித் தரக்கூடிய ஒரு துறையாக ஆளுமை விருத்தியை மேம்படுத்தக்கூடிய வழியாக இது உள்ளது.




நாச்சியாதீவு பர்வீன்

# கறுப்புக் காடு...

ஏ.ஆர்.நவாஸ்

என் வனத்தை நானே வரைந்து
கொள்ள ஆசைப்படுகின்றேன்
என் வனத்தில் பச்சைவாசம்
அதிகப்படியாக இருப்பதால்
அங்கே சில குருவிகளும்
பிராணிகளும்
கலவி கொள்ள மறுக்கின்றன

எனது காட்டில் விசப்
பூச்சிகளையும்
விசப் பாம்புகளையும்
வரையமாட்டேன்
இலையுதிர்ந்து நிர்வாணமாய்
நிற்கும் மரங்களையும்
மணம் பரப்பாத பூக்களையும்
முட்கள் நிறைந்த செடிகளையும்
நிழற்றமாட்டேன்
அங்கே இரக்கமற்ற ஓநாய்
களையும்
ஊன்
உண்ணிக்
கழுகு
களையும்
வரைய
மாட்டேன்
அங்கே
மீன்கள்
குளிக்கின்ற
நதிகளையும்
வண்ணத்துப்
பூச்சிகளின்
வாழ்விடங்களையும்
காட்டு மான்களின்
இருப்பிடத்தையும்
கம்பளிப் பூச்சிகளின்
பற்றைகளையும்
அழகாக வரைந்து கொள்வேன்.
எனது வனத்தை ஆட்சி
செய்கின்ற
பழங்குடியினரின்
ஆதி மொழியை இசையாக்கி
சில்வண்டுகளை பாடவைப்பேன்
பின் என் காட்டை
கறுப்பு நிறத்தால் வரைந்து
முடித்துக் கொள்வேன்
ஏனெனில் எனது காட்டில்
மீண்டும் சிவப்பு நிறத்தை
பார்ப்பதற்கு நான் தயாரில்லை.






## கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும்

# கல்விப் புலத்திற்கு ஒரு உசாத்து துணை நூலாகும்

ஓய்வுநிலை அதிபர் எம்.எல்.எம். இஸ்மாயில் எழுதிய கல்விப் பணியில் சாதனைகளும் சவால்களும் என்ற நூலானது கல்வி புலத்தில் இயங்குகின்ற கல்வியலாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் ஒரு உசாத்துணை நூலாக அமைகின்றது. கல்வி முகாமைத்துவம் மற்றும், பாடசாலை முகாமைத்துவம் போன்ற செயற்பாடுகளில் ஒரு அதிபர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும் சவால்களும் அதனை வெற்றிகரமாகவும், சமயோசிதமாகவும் தீர்த்துவைக்கின்ற ஆளுமையும் அந்த நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் அதிபருக்கே உரித்தானதாகும். அந்த வகையில் அதிபர் இஸ்மாயில் அவர்கள் பட்டதாரி ஆசிரியராக, அதிபராக அவர் பணியாற்றிய 41 வருடங்களில் முகம் கொடுத்த பல்வேறுபட்ட சவால்களை வெற்றி கொண்டு முன்னோக்கிச் சென்ற தனது அனுபவத்தை இந்த நூலின் மூலம் மிகத் தெளிவாக ஆவணப்படுத்தி உள்ளார்.

பாடசாலை என்ற நிறுவனத்தின் தலைவராக அதிபர் செயலாற்றுகின்ற போது மாணவர்களோடும், பெற்றோர்களோடும், ஆசிரியர்களோடும், ஏனைய கல்வி அதிகாரிகளோடும், அதையும் தாண்டி அரசியல்வாதிகளோடும் பழக வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதன் போது எழுகின்ற எல்லா விதமான பிரச்சினைக்கும் அதிபரின் மூலமே தீர்வு பெற வேண்டி உள்ளது. அந்தத் தீர்வு பொதுமையானதாகவும் அனைத்து தரப்பினரையும் திருப்தி படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

எல்லா தரப்பினரையும் திருப்தி படுத்தக்கூடிய ஒரு தீர்வினை வழங்குவது என்பது சாத்தியமான விடயமில்லை. ஆனால் அதிபர் இஸ்மாயில் அவர்கள் பிரச்சினைகள் எழுகின்ற போது எந்தத் தரப்பிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில்

சமயோசிதமான தீர்வுகளை பெற்றுக் கொடுத்திருப்பதும் எல்லாத் தரப்பினரோடும் சமாந்தரமான ஒரு உறவை பேணி இருப்பதும் இந்த நூலின் மூலம் புலனாகின்றது.

ஒரு பாடசாலை அதிபரின் பொறுப்பும், கடமையும், செயற்பாடும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை இந்நூல் துல்லியமாகச் சொல்லி நிற்கின்றது. மாணவர்களுக்கும் அதிபருக்கும் இடையிலான தொடர்பு, அவ்வாறே ஆசிரியர்களுக்கும் அதிபருக்கு இடையிலான தொடர்பு, அதிபருக்கும் பெற்றோர்களுக்கும் இடையிலான தொடர்பு,

அத்தோடு அதிபருக்கும் சமூக சேவை நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்பும் கல்வி அதிகாரிகளுக்கு இடையிலான தொடர்பும் என அதிபருக்கான அந்த இயங்கு தளம் மிக விரிவானதாக இந் நூலின் மூலம் சுட்டப்பட்டுள்ளது. இந்த இடைத்தொடர்பு ஆரோக்கியமானதாக இருந்தால் மாத்திரமே பாடசாலையை மிகச் சிறந்த பாடசாலையாக உருவாக்குவதற்கும் கல்வி நிலையில் மாணவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதற்கும் அந்தப் பாடசாலை சமூகத்தினால் முடியும். அதிபர் இஸ்மாயில் அவர்கள் இதனை மிகக் கச்சிதமாக செய்து வெற்றியும் பெற்றுள்ளதை இந்நூலை வாசிக்கின்ற வாசகர்களுக்கு மிகத் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

வளப்பற்றாக்குறை உள்ள ஒரு பாடசாலைக்கு அதிபராகச் சென்று வளங்களை பெற்றுக்கொண்டு பெற்றோர்கள் ஆசிரியர்களின் உதவியோடு அந்தப் பாடசாலையை முன்னிலைக்கு கொண்டு வருவதற்கு அசாத்தியமான ஆளுமை அவசியம் அந்த ஆளுமை நிறைந்த ஒரு அதிபராக அதிபர் இஸ்மாயில் அவர்களை அடையாளம் காண முடிகிறது. இந்நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு சிம்பலாகஸகொட்டுவ மதீனா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

பெறுமதி மிக்க, கல்விப்புலத்திற்கு மிகவும் தேவையான இந்நூலின் வெளியீட்டு விழாவில் பாடசாலையின் பழைய மாணவர்கள்,ஆசிரியர்கள் பெற்றோர்கள் கல்விப் புலத்தில் உயர் பதவி வகிப்பவர்கள் என பல்வேறு தரப்பினர் கலந்து கொள்ள உள்ளனர்.

ஓய்வு பெற்ற அதிபர் இஸ்மாயில் அவர்களின் இந்த நூலானது கல்விப்புலத்தில் ஒரு மாற்றத்திற்கான உந்து சக்தியாக அமையும் என எதிர்பார்ப்போம்.

-நாச்சியாதீவு பர்வீன்-

# முஸ்லிம் சமய செயற்பாடுகள் தொடர்பாக வைத்தியர்களுக்கு விளக்கமளிப்பு







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க அதன் மூலம் நடாத்தப்படும் அரச மொழிகள் கல்வி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 40 வைத்தியர்களுக்கு முஸ்லிம் சமய செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்வு (11) முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந் நிகழ்வை வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் அதன் நிர்வாகிகள் குறுகிய காலத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியின் மூலம், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமுதாயத்தின் பண்பாடுகள் மற்றும் மதப்பண்புகளின் ஆழமான புரிதலை உருவாக்க கவனம் செலுத்தியது.

இதில் வளவாளர்களாக வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலின் வேண்டுகோளின் பேரில் நிதா பவுண்டேஷன் நிறுவனம் பங்கு கொண்டு இந்த நிகழ்ச்சியை நடாத்தினர்.

# மூத்த ஆசிரியர் பாரதியின் நினைவுக் கூட்டம்



கொழும்பில் இருந்து வெளிவரும் வீரகேசரி - தினக்குரல் மற்றும் யாழ் ஈழநாடு பத்திரிகைகளின் மூத்த ஆசிரியர் பாரதி இராஜநாயகம் பற்றிய நினைவு வணக்க கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30க்கு வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்க பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள நினைவு வணக்க கூட்டத்திற்கு, வீரகேசரி நாளிதழ் - வார இதழ் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன் தலைமை தாங்குவார்.

தமிழ் - சிங்கள பத்திரிகைகளின் மூத்த ஆசிரியர்கள், பிராந்திய செய்தியாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் இலக்கியத்துறையை சேர்ந்த பலரும் உரையாற்றவுள்ளனர்.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான பாரதி, கொழும்பில் சிங்கள ஊடக அமைப்புகளுடன் இணைந்து 2000 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆம் ஆண்டு வரை பணியாற்றியிருந்தார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஈழநாடு நாளிதழின் பிரதம ஆசிரியராக ஒரு வருடம் கடமை புரிந்தார்.

35 ஆண்டுகளின் பின்னர் கொழும்பில் இருந்து மீண்டும் யாழ்ப்பாணம் சென்ற பாரதி, தனது சொந்த மண்ணில் மரணிக்கும் வரை வீரகேசரியின் வடபிராந்திய ஆசிரியராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒழுங்கமைப்பு அ.நிக்ஸன் பத்திரிகையாளர்.

## மனநலமும் ஆலோசனையும் 71

# என் மீதான எனது நம்பிக்கை

எல்லோரும் நம்பிக்கையுடன் பிறப்பதில்லை. அது நாம் பெறக்கூடியதும் பெறவேண்டியதுமான ஒரு அவசியமான திறன். நாம் நம்மை நம்புவதன் மூலம், நம்மை ஏற்றுக் கொள்வதன் மூலம் வளர்த்துக் கொள்ள வேண்டியது. வளர்த்துக் கொள்ள முடியுமானது. இந்த மனத் திறன் இல்லாமல் மண்ணில் மனிதனாக வாழ முடியாது.

நம்பிக்கை மற்றவர்களிடம் இருந்து வரக்கூடியதல்ல. அது எமக்குள் இருந்து வெளிவரவேண்டியது. மற்றவர்களை விட எமக்கு நாம் உண்மையாக இருப்பது நம்பிக்கை வெளிப்படுவதற்கான அடிப்படையாகும்.

நம்பிக்கையை வளர்ப்பது என்பது நேரம் எடுக்கும் ஒரு செயலாகும். அது சட்டென்று உருவாகுவதில்லை. மற்ற திறமைகளைப் போலவே இதற்கும் அன்றாட பயிற்சியும் தொடரான முயற்சியும் தேவைப்படுகிறது.

நாம் நமது ஆறுதல் வலயத்தில் சிக்குண்டு இருக்காமல் தொடர்ந்து முயற்சி செய்து, நாம் நம்மை ஊக்குவிக்க முயற்சி செய்வதன் மூலம் இந்த மனத்திறனை வளர்க்கும் பயணத்தை தொடங்கலாம்.

நாம் ஒன்றை அடைய வேண்டும் என்ற மனநிலையில் எவ்வளவு வேகமாக முன் வருகிறோமோ அதைவிட வேகமாக நம்பிக்கை வெளிவர ஆரம்பிக்கும்.

– நாம் வெற்றியாளராக ஆகமுடியும் என்று நம்புவது அதை அடைவதற்கான முதல் படியாகும்.

– நாம் பல விடயங்களை செய்ய ஆற்றல் பெற்றவர்கள் என்று நம்புவது நம்பிக்கை வருவதற்கான அடுத்த வழியாகும்.

– ஒவ்வொருவருக்கும் அவரவருக்கு ஏற்ற ஆற்றல்கள், உள்திறமைகள் உள்ளன. நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமது திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை செயலுருவில் கொண்டு வர திட்டமிடுவதாகும். திட்டம் நிறைவேறும் வரை உழைப்பதுமாகும்.

நாம் நமது சொந்த திறன்களை அடையாளம் கண்டு அவற்றை வளர்க்க நடவடிக்கை ஏடுத்தால் எந்த தடைகளை சந்தித்தாலும் அவற்றை எதிர்கொண்டு எமது இலக்கை அடையலாம்.

எங்களை நம்புவது என்பது எங்கள் சொந்த திறன்கள் மீது நம்பிக்கை வைப்பதாகும். எங்களுக்கே உரித்தான ஆற்றல்கள் மீது நம்பிக்கை வைப்பதாகும்.

எங்கள் சொந்த திறன்கள் மீது நம்பிக்கை ஏற்படும் அளவு எங்கள் மீதான சந்தேகங்கள் அகன்று ஆக்கப்பூர்வமான நபராக நாம் ஆகிவிட வழிவகுக்கும்.

எங்கள் மீதான நம்பிக்கை

– நாம் பெறுமதியானவர் என்ற உணர்வை ஏற்படுத்தும்.

– மதிப்பும் மரியாதையும் மிக்கவர் என்ற உணர்வை உருவாக்கும்.

– எமது இலக்குகளை அடைய நாம் தகுதியானவர் என்று நம்பும் போது அவை கடினமானவையாக இருந்தாலும் அவற்றை அடைவதற்கான ஆற்றல் கிடைக்கும்.

– நாம் உயர்வான, உன்னதமான மனிதன் என்பதை நம்புவோம்..!

நல்ல குணங்கள் எமக்குள் உண்டு என்று நம்புவோம்..!

எதை செய்ய வேண்டும் என்ற ஆசை ஆர்வம் இருக்கிறதோ அதை செய்வதற்கான ஆற்றல்கள் இருக்கின்றன என்று நம்புவோம்...!

– நான் என்னோடு நேர்மையாகவும் தெளிவாகவும் இருக்கிறேன்

– இலக்குகளை நிர்ணயித்து அவற்றை அடையும் திறன்களை பெற்றிருக்கிறேன்..!

– நான் விரும்பும் இலக்கை அடையும் சாத்தியம் எனக்கு உண்டு..!

– நான் விரும்பும் வெற்றியை உருவாக்கும் திறன் எனக்கு உண்டு..!

– எதிர்காலத்தை நோக்கி சரியான நடவடிக்கை எடுக்க என்னிடம் அறிவும் ஆற்றலும் உண்டு...!

என்று உறுதியாக சொல்லிக் கொள்வோம். அவற்றை அடைந்து நம்பிக்கைவாதியாக ஆக முடியும் என்று நம்புவோம்.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

பயாஸா பாஸில்




# ரமழானை வரவேற்போம்

**(உம்மு ஷா)**

புனித ரமழானை வரவேற்பதற்காக பலரும் வீடுகளை சுத்தம் செய்கின்றனர், அலங்கரிக்கின்றனர்.

சிலர் ரமழானில் பகற்காலங்களில் சாப்பிட முடிவதில்லையே என்று சுவை தேடித் தேடி இப்போதே வயிற்றை நிரப்புகின்றனர்.

இன்னும் சிலர் ரமழானில் பசித்திருக்க வேண்டுமே என்று இப்போதிருந்தே வயிற்றை பழக்கப் படுத்த வேண்டும் என்று அங்கலாய்க்கின்றனர்.

அவ்வாறல்ல...

ரமழானை வரவேற்பதற்காக,

- எமது உள்ளத்தை தயார் படுத்துவோம்..

உள்ளத்தில் உள்ள (கோபம், பொறாமை, பெருமை,....) போன்ற உள நோய்களை கலட்டி எறிவோம்.

- நல்ல தூய எண்ணங்களை உள்ளத்தில் விதைப்போம்.

- உறவுகளைப் பேணி இறை அருளோடு ஆரம்பிப்போம்.

- திக்ருகளால் நாவை கழுவிக் கொள்வோம்.

- அல்குர்ஆனை உயிர் மூச்சாக சுவாசிப்போம்.

- அல்லாஹ்வுடனான தொடர்பை அதிகப்படுத்துவோம்.

- தொழுகைகளால் வாழ்வை அலங்கரிப்போம்.

- சுஜூதுகளால் இதயத்தை நனைப்போம்.

- ஸதகாக்களால் செல்வதை சுத்தம் செய்வோம்.

- பிரார்த்தனைகளால் வாழ்வை ஒளிமயமாக்குவோம்.

- றையான் வழியாக உயர்ந்த சுவர்க்கமான பிர்தௌஸ் ஐ அடைந்திடுவோம்.




# பொறாமை

**(முஅஸ்கரிய்யீ)**

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரைச் சுற்றியும் பொறாமைக் காரர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள் அக்கம் பக்கத்தவராகவோ..அயலவராகவோ சொந்த பந்தங்களாகவோ உடன் பிறப்புக்களாகவோ குடும்பத்தவராகவோ நண்பர்களாகவோ...ஏதோ ஒரு வகையில் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள் என்பது நாம் அறிந்த உண்மை.

எதற்காக வெல்லலாம் பொறாமை படுகிறார்கள் என்பது பற்றி சிந்தித்துப் பார்த்தால் ....

என்னை விட அவன்ஃஅவள் நன்றாக இருக்கிறான்(இருக்கிறாள்) என்பதுதான் சுறுக்கம்...

அறிவு முதல் கொண்டு அழகிலாக இருக்கலாம் ஆற்றலிலாக இருக்கலாம் செல்வத்திலாக இருக்கலாம் சம்பாத்தியத்திலாக இருக்கலாம் சொத்துக்களிலாக இருக்கலாம் வீடு வாசல்களிலாக இருக்கலாம் சந்தோசத்திலாக இருக்கலாம் வாழ்க்கையிலாக இருக்கலாம் இன்னும் என்னென்னவெல்லாம் நம்மை விட அடுத்தவன் முன்னேறிவிடக் கூடாது அப்படி முன்னேறிவிட்டானா முடிஞ்சுது....

எப்படி அவனை கீழே தள்ளி விடுவது என்பதை சிந்திக்கத் துவங்கிவிடுவார்கள்...

பொறாமை உள்ளங்களில் ஊஞ்சலாடத் துவங்கி விட்டால் அவனை(ளை) அறியாமலே நாளடைவில் மன நிலையை நாசமாக்கும் மண நோயாளியாக ஒரு நாள் அவன்(ள்) மாறிவிடுவான்(ள்) என்பதில் சந்தேகமில்லை...

பொறமை எப்படியெல்லாம் வெளிப்படும் அல்லது விஸ்வரூபம் எடுக்குமெனில்... அவதூறு சொல்லுவார்கள் இட்டுக்கட்டுவார்கள் மூட்டிவிடுவார்கள் இது போல கெட்ட மோசமான குணங்களை வெளிப்படுத்த துவங்கிவிடுவார்கள்...

இவைகள் எல்லாம் எமக்கெல்லாம் வழிகாட்டியாக வந்துதித்த எம் பெருமானாரின் வழி முறைகளுக்கு மாற்றமானது என்பதை மறந்து விடுவார்கள்.

சிலர் இருப்பார்கள் அவர்களைப் போல நல்லவர்கள் இல்லை அமல் செய்வதாக இருக்கட்டும் இபாதத் செய்வதாக இருக்கட்டும் ஆனால் பொறமைக்குணம் நிறம்பி வழியும். பேசினால் அவர்களைப்போல நல்லவர்களும் இருக்க மாட்டார்களோ என்று நம்புகின்ற அளவிற்கு பேசுவார்கள். ஆனால் உள்ளத்தில் ஹஸது நிறைந்திருக்கும்.

உதாரணமாக சிலர் சொல்வதை கேட்டிருக்கிறேன்:

* சோத்துக்கே வழியில்லாம ஒரு காலம் திரிஞ்வனுக இப்ப ஆளாகிட்டாங்க.

** மூக்கு வடிச்சுக்கொண்டு திரிஞ்சவனெல்லாம் மேடையேறிப் பேசுறாங்க.

இப்படியான வார்த்தைப்பிரயோகங்களெல்லாம் எதனால் வெளிப்படுவதாக நினைக்கிறீர்கள்...பொறாமையின் உச்ச கட்டத்தின் வெளிப்பாடு தான்..ந ஊது பில்லாஹ்...

அந்த வகையில். பொதுவாக மனிதன் என்ற அடிப்படையில் நமக்கு ஒருவரைப் பார்த்து பொறாமை வருகிறதாக நாம் உணர்ந்தால் நாம் என்ன செய்வது.

ஆம் எமை விட உயர்வாக அல்லது எமை விட சிறப்பாக இருக்கும் ஒருவரைப் பார்த்தால் செய்த்தான் பொறாமைக் குணத்தை ஊற்றெடுக்கச் செய்வான் அப்படி என்னம் வந்தால்.

உடனே நம் உள்ளங்களை சிந்திக்கப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியது... இது அவருக்கு இறைவன் வழங்கிய அருள் (நிஃமத்) அந்த அருளும் அருளாளனுக்கு சொந்தமானது அவன் இன்னாருக்கு இதை வழங்கிட நாடினான் வழங்கியிருக்கிறான் இவ்வாறு எமக்குள் நாம் சிந்தித்துக் கொள்வதோடு பொறாமை வந்ததற்காக இஸ்திஃபார் செய்து கொள்வோம்...நாளடைவில் எம் உள்ளத்தில் பொறாமை எனும் குனம் அடையாளமே தெரியாமல் அகன்று விடும் இன்ஷா அல்லாஹ்.. வள்ள நாயன் அல்லாஹ் நற்குனம் மிகுந்தவர்களாய் எம்மை வாழ வைப்பானாக..ஆமீன்.

# பாகிஸ்தானில் ஆரம்பித்தது சம்பியன் கிண்ணத் தொடர்:



அரபாத் பஹர்தீன்




## 8 அணிகளின் பலமும், பலவீனமும்

# மகுடம் சூடப்போகும் அணி எது?

9ஆவது ஐசிசி சம்பியன் கிண்ண தொடர் நேற்று பாகிஸ்தானில் ஆரம்பித்திருந்தது. இத் தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றிருக்க முதல் முறையாக முன்னாள் உலகச் சம்பியனான இலங்கை அணி இத் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
மேலும் இத் தொடர் கடந்த 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வருடம் இடம் பெறுவதுடன், இத் தொடர் பாகிஸ்தானில் இடம்பெறுமா என்ற கேள்விகள் எழுத்திருக்க இத் தொடர் பாகிஸ்தானில் தான் நடாத்தப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இருப்பினும் பாகிஸ்தானின் வைர எதிரரி நாடாக நோக்கப்படும் இந்திய அணி பாகிஸ்தான் செல்ல முடியாது என அறிவித்தமையால், அவ்வணி பங்கேற்கும் போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெறவுள்ளன.
அதிலும் குறிப்பாக இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### குழு நிலை விபரம்

இத் தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றிருக்க அவ் 8 அணிகளும் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதில் குழு ஏ இல் போட்டிகளை நடாத்தும் நடப்புச் சம்பியனான பாகிஸ்தான் , இந்தியா, பங்களாதேஸ் மற்றும் நியூஸிலாந்து ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.
மேலும் குழு பி இல் அவுஸ்திரேலியா , தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆப்காணிஸ்தான் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் முதல் சுற்றில் ஒரு அணி தமது குழுவிலுள்ள மற்றைய 3 அணிகளுடன் தலா ஒரு முறை மோதவுள்ளது. பின்னர் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதியில் மோதி பின்னர் இறுதிப் போட்டியில் பங்கேற்கவுள்ளது.
சம்பியன் கிண்ண தொடரில் பங்கேற்கும் அணிகளின் பலம் மற்றும் பலவீனம் பற்றிய தகவல்களை ஒவ்வொரு அணியாகப் பார்க்கலாம்.

### நடப்புச் சம்பியனான பாகிஸ்தான்

#### பலம்

முகம்மது ரிஸ்வான் தலைமையிலான நடப்புச் சம்பியனாக தமது சொந்த மைதானத்தில் களம் நுழையும் பாகிஸ்தான் அணிக்கு மிகப் பெரிய பலமான வேகப் பந்து வீச்சே காணப்படுகின்றது. அதிலும் சகீன் அப்ரீடி, நசீம் ஸா மற்றும் ஹரிஸ் ரௌவ் ஆகியோர் மிகப் பிரதானமாக விளங்குகின்றனர்.
அடுத்து அதிர இளம் துடுப்பாட்ட வீரர்களான அணியில் இடம்பெற்றுள்ள சல்மான் அலி அஹா, உஸ்மான் கான் மற்றும் மீண்டும் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ள பக்கர் ஸமான் ஆகியோர் அணியின் ஓட்ட வேகத்திற்கு துணை நிப்பார்கள் என நம்பலாம்.
மேலும் அனுபவமிக்க உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்களான பாபர் அஸாம் மற்றும் முகம்மது ரிஸ்வான் ஆகியோர் அணியில் இருப்பது அவ் அணியன் மிகப் பெரிய பலமாக நோக்கப்படுகிக்றது. அனுபவம் மிக்க ஸ்பின் பந்து வீச்சாளர்கள்.

#### பலவீனம்

பாகிஸ்தான் அணியின் மிகப் பெரிய பலவீனமாகப் பார்க்கப்படுவது அவ்வணியின் துடுப்பாட்ட வீரர்களே. குறிப்பிாக ஆரம்ப வரிசையில் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடினால் பின்னர் வருகின்ற மத்திய மற்றும் பின்வரிசை வீரர்கள் விரைவாக ஆட்டமிழந்து அணிக்கு ஏமாற்றத் தைக் கொடுப்பது அவர்களின் இயல்பாக உள்ளது.
மேலும் இந்திய அணியுடனாக போட்டியில் அவ்வணியின் வீரர்கள் தொடர்ச்சியாகப் பிரகாசிக்கத் தவறிவருவது மிகப் பெரும் பலவீனமாகவுள்ளது. அத்துடன் சுழல்பந்து வீச்சு சொல்லும் அளவிற்கு சிறப்பானதாக இல்லையெனலாம்.




### கிண்ணம் வெல்லும் முனைப்புடன் இந்தியா

#### பலம்

ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி இம்முறை 3ஆவது முறையாகவும் சம்பின் கிண்ணத்தை வெற்றி கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் களம் கண்டுள்ளது.
அவ்வணியின் மிகப் பெரிய பலமே அவர்களின் பலமான துடுப்பாட்ட வரிசை தான். உலகின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களான ரோஹித் , கோஹ்லி, ஹர்திக் பாண்டியா, ரிஸப் பாண்ட், ராகுல், ஐயர் என அடுக்கிக் கொண்டே செல்லும் அளவிற்கு அவர்களின் துடுப்பாட்ட ஆதிக்கம் மேலோங்கியுள்ளது.
மேலும் அணியின் வெற்றிக்குத் தேவையான சகலதுறை வீரர்களை தன்னகத்தே கொண்டுள்ள இந்திய அணிக்கு பாண்டியா , ஜடேஜா, அக்ஸெர் பட்டேல் ஆகியோர் பலமான உள்ளனர். போட்டியின் தன்மையை மாற்றுவதில் இவர்கள் உலகத் தரம் வாய்ந்தவர்கள் எனலாம். அடுத்து சுழல்பந்துவீச்சு அவர்களின் பலங்களில் மிக முக்கியமானது.

#### பலவீனம்

இந்திய அணியானது இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடன் மோதும் நிலை ஏற்படுமாயின் அவ் அணியுடன் இறுதி ஆட்டத்தில் ஆடும் திறன் மாறுபடுவதே அவர்களில் மிகப் பெரிய பலவீனமாகும்.
அத்துடன் இந்திய அணியின் தற்போதைய பலவீனங்களில் மிகப் பிதானமானது இத் தொடரிலிருந்து வேகப்பந்து வீச்சாளரான ஜெஸ்பிரிட் பும்ரா விலகியமையாகும்.

### சம்பியன் மகுடத்தை குறிவைத்துள்ள அஸ்திரேலியா

#### பலம்

அனுபவமிக்க நட்சத்திர துடுப்பாட்ட வீரரான ஸ்டீபன் ஸ்மித் தலைமையில் களம் கண்டுள்ள அவுஸ்திரேலிய அணியின் பலமே அவர்களின் அதிரடித் துடுப்பாட்டம் தான். விக்கெட்டுக்கள் ஒரு புறம் வீழ்ந்தாலும் அவர்களில் அதிரடி தொடர்வதே அவர்களின் தாரக மந்திரம் எனலாம்.
மேலும் நம்பிக்கை மிக்க துடுப்பாட்ட வீரர்களான ஹெட், கெரி, லபுச்சங்கே மற்றும் ஸ்மித் ஆகியோர் உள்ளமை அவ்வணிக்கு பலம் சேர்க்கிறது. அத்துடன் சகலதுறை வீரர்களான மெக்ஸ்வெல் மற்றும் ஹார்டி ஆகியோர் உள்ளமையும் அணிக்கு வலுச்சேர்த்துள்ளது.

#### பலவீனம்

அவுஸ்திரெலிய அணியின் மிகப் பெரிய பலவீனமாக மாறியிருப்பது இத் தொடரிலிருந்து அவ் அணியின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களான ஸ்டாக்ர் , அணியின் தலைவரான கமின்ஸ் மற்றும் ஹசில்வுட் ஆகியோர் விலகியமையாகும். மேலும் சகலதுறை வீரர்களான மிச்சல் மார்ஸ் ஸ்டொய்னிஸ் ஆகியோர் விலகியமையும் அணிக்கு மிகப் பெரிய பின்னடைவைக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




### அதிரடியில் கலக்கப்போகும் இங்கிலாந்து

#### பலம்

விக்கெட்காப்பு அதிரடித் துடுப்பாட்ட வீரரான ஜோஸ் பட்லரின் தலைமையில் களம் நுழைந்துள்ள இங்கிலாந்து அணி இம்முறை கிண்ணம் வென்றாக வேண்டும் என்ற நிலையோடு களம் காண்கிறது. அவ்வணியின் பலமாக அதன் தலைவரான பட்லரே நோக்கப்படுகின்றார். அவரின் அதிரடி ஆரம்பமே அவ்வணியின் ஓட்டக் குவிப்பிற்கு உந்து சக்தியாகும்.
மேலும் அனுபவமிக்க துடுப்பாட்ட வீரர்களான ஜோ ரூட் , ஹென்றி புறூக் ஆகியோருடன் சகலதுறை வீரரான லிவிங்ஸ்டன் அணியில் உள்ளமை பெரும் பலமாாக உள்ளது.
அத்துடன் ஆர்ச்சர், மார்க் வுட் மற்றும் சாகிப் மொஹம்மட் போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள் இருப்பது பலமே.

#### பலவீனம்

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சிறந்து விளங்கினாலும் அவ் அணியின் சுழல்பந்து வரிசை சிறப்பானதாக இல்லை. குறிப்பாக ஆதில் ரசீத் மாத்திரமே முழு நேர சுழல்பந்து வீச்சாளரான அணியில் உள்ளமை அதன் பலவீனமாகும். மேலும் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்கள் வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடும் போது எதிரனியின் சவாலை எதிர்கொள்வதில் மிகுந்த சிறமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் அவர்களால் வெற்றி இலக்கினை துரத்தி வெற்றி பெறமுடியாமல் போகின்றமை மிகப் பெரிய பலவீனமாகக் கருதலாம்.

### வரலாறு படைக்குமா நியூஸிலாந்து

#### பலம்

சுழல்பந்து வீச்சாளரான மிச்சல் சாண்ட்னரின் தலைமையில் களம் நுழைந்துள்ள நியூஸிலாந்து அணிக்கு பொறுப்பான துடுப்பாட்ட வீரர்களான கேண் வில்லியம்ஸன், லெத்தம், கோன்வே ஆகியோரே பலமாகும். மேலும் சகலதுறை நட்சத்திரங்களான மிச்சல், ப்ரேஸ்வெல் பிலிப்ஸ் ஆகியோர் அவ்வணிக்கு மேலும் பலம் சேர்க்கின்றனர்.
அத்துடன் வேப்பந்துவீச்சாளர்களான மேட் ஹென்றி சமீப காலமாக பிரகாசித்து வருகின்றமை அவ்வணிக்கு நம்பிக்கை கொடுத்துள்ளது.

#### பலவீனம்

அவ் அணியின் பலவீனமாக பார்க்கப்போனால் பாகிஸ்தானில் இடம்பெற்ற முக்கோணத் தொடரின் போது காயமடைந்த சகலதுறை வீரரான ரிச்சின் ரவீந்திர வின் இழப்பு அவ் அணியின் பலவீனம் எனலாம். மேலும் பந்துவீச்சில் சொல்லும் அளவிற்கு அனுபவமிக்க வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லாமையும், பெர்குஸனினல் விலகலும் அவ்வணியின் பாரிய பலவீனமாகக் கருதலாம்.

### சம்பியன் கிண்ணம் தூரமாகியுள்ள தென்னாப்பிரிக்கா

#### பலம்

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டெம்ப பவுமா வழிநடாத்தும் தென்னாபிரிக்க அணி இக் கிண்ணத்தையாவது வெற்றி கொள்ளுமா என்ற எதிர்பார்ப்புடன் களம் கண்டுள்ளது. மேலும் அவ்வணியின் பலமாக சொல்லப்போனால் பவுமா, க்ளாஸன், வெண்டர் டூசன், மில்லர் ஸ்டப்ஸ் போன்ற நம்பகமாக துடுப்பாட்ட வீரர்களை சொல்லலாம்.
மேலும் சகலதுறை வீரர்களான மார்க்ரம், ஜென்ஸன் மற்றும் முல்டர் ஆகியோர் அணயில் உள்வாங்கப்பட்டுள்ளமை அவர்களின் பலத்தை அதிகப்படுத்தியுள்ளது. அத்துடன் வேகப்பந்து வீச்சில் ரபாடா , இங்கிடி மற்றும் நோட்ரிஜே ஆகியோர் எதிரணிக்கு இடைஞ்சல் கொடுப்பார்கள் என நம்பலாம்.

#### பலவீனம்

இறுதிப் போட்டி என்றாலே தென்னாபிரிக்க அணியால் சிறப்பாக பிரகாசிக்க முடியாமல் போகின்றமை அவர்களது பலவீனமானும். குறிப்பாக மிக இலகுவாக கையிலிருக்கும் போட்டியை கோட்டை விடுவதே அவர்களின வழக்கமாக மாறியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

### எதிரனியை மிரட்டும் பங்களாதேஷ்

#### பலம்

ஆரம்ப துடுப்பாட்ட வீரரான நஜ்முல் ஹசன் சான்டோவின் தலைமையில் களம் காணும் பங்களாதேஷ் அணிக்கு சுழல்பந்துவீச்சு மிகப் பெரும் பலமாக உள்ளது. பங்களாதேஷ் அணியில் உலகத் தரத்திற்கு ஈடான சுழல் பந்து வீச்சாளர்கள் உள்ளனர். குறிப்பாக மெஹ்தி ஹசன் அணியில் உள்ளமை பலமாகவே கருதலாம். மேலும் துடுப்பாட்டத்தில் லிட்டன் தாஸ், நஸ்ருல் /ஹசைன், தௌலத் /ஹசைன் போன்ற இளம் துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் திறமையை நிஷரூபிப்பார்கள் என நம்பலாம்.

#### பலவீனம்

பங்களாதேஷ் அணியின் பலவீனமாகக் காணப்படுவது அவ்வனியின் துடுப்பாட்ட வீரர்கள் நிலைத்திருந்து அணிக்காக ஆடாமல் போகின்றமையாகும். அத்துடன் சிறந்த வேகப்பந்துவீச்சு வரிசை அவர்களிடம் இல்லாமையாகும். மேலும் அவ்வணியின் சகலதுறை வீரரான சகீப் அல் ஹசன் இல்லாமை அவ் அணிக்கு மிகப் பெரும் பலவீனமாகக் கருதலாம். மேலும் வெளிநாட்டு மைதானங்களில் பங்களாதேஷ் தமது திறமையினை நிரூபிப்பது மிக மிக குறைவாகும்.




### சுழல்பந்துவீச்சில் அசத்தும் ஆப்கானிஸ்தான்

#### பலம்

ஹஸ்மதுல்லாஹ் ஸஹீதி தலைமையில் சம்பியன் கிண்ணத்தில் பங்கேற்றுள்ள ஆப்கானிஸ்தான் அணியின் பலமே சுழல்பந்து வீச்சாகும். ஆப்கானிஸ்தான் அணியில் உலகின் சிறந்த சுழல் பந்து வீச்சாளர்கள் உள்ளனர். குறிப்பாக ரஷீத் கான், முகமது நபி, முஜீப் உர் ரஹ்மான் போன்றவர்கள் எந்த அணிக்கும் சவாலாக உள்ளனர். அத்துடன் அதிரடித் துடுப்பாட்டத்தில் பெயர்பேகான ரஹ்மானுல்லா குர்பாஸ், ஹசரத்துல்லா ஸசாய், இப்ராகிம் சத்ரன் போன்றவர்கள் தாக்குதல் பாணியில் துடுப்பெடுத்தாடுகின்றமை அவ்வணியின் பலமாகும்.
மேலும் ஆப்கானிஸ்தான் அணியில் இளம் வயது வீரர்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளனர். அவர்கள் மிகவும் ஆற்றல் மிக்கவர்களாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

#### பலவீனம்

அவ்வணிக்கு பலவீனமாகக் கருதப்படுவது அனுபவமற்ற வீரர்கள் அணியில் இடம்பெற்றுள்ளமையாகும். காரணம் இது மிக முக்கியமான தொடர் என்பதனாலும் உலகின் சிறந்த 8 அணிகள் பங்கேற்றுள்ளமையாலும் எதிரணியிடம் இருந்து மிகப் பெறும் அழுததங்களை சந்திக்க நேரிடும். ஆகவே அழுத்தமான சூழ்நிலைகளை கையாளும் திறன் இளம் வீரர்களிடம் குறைவாகக் காணப்படுவதாகும்.
ஆகவே இறுதியாக இந்த 9ஆவது சம்பின் கிண்ணத் தொடரில் எந்த அணி சம்பியன் மகுடத்தை வெற்றி கொள்ளும் என்பது மிகப் பெறும் கேள்வியாகவே உள்ளது. இருப்பனும் இந்தியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய 3 இல் ஒரு நாட்டுக்கு சம்பியன் மகுடம் கொண்டு செல்லப்படலாம் என குறித்து வைத்துக் கொள்ளலாம்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.